வார இதழ்
# தேசியம்
www.thesiyamnews.com
THESIYAM தேசியம் (Sinhala)

Smart Fly
ARUN WINGS
TRAVELS & TOURS
கடவுச் சீட்டு / வீசா சேவை / ETA வீசா / பயணக் காப்பீடு
விடுமுறை பயணத்தொகுப்பு / பயணத்திட்டம்
ARUN WINGS TRAVELS & TOURS (Pvt) Ltd
143, Temple Road, Jaffna. Tel: 076 8472458, 076 6668680
arunwingslanka@gmail.com

மலர்: 02 | இதழ்: 15 | வள்ளுவர் ஆண்டு 2054 | 18.01.2024 - 24.01.2024 | ஊக்குவிப்பு: 80/=

# 2001 பொங்கு தமிழ் பிரகடனம்: அடக்கு முறைக்கு எதிரான பேரெழுச்சி!









பக்கம் 03

## குருந்தூர் மலை விவகாரம்! ஜெனீவாவை திருப்திப்படுத்த இரகசிய திட்டமா?



பக்கம் 11

## கிட்டு என்றொரு பெருந்தளபதி!





பக்கம் 06

## தைப்பொங்கலும், மாட்டு வண்டிச் சவாரியும்: ஈழத் தமிழரின் பாரம்பரிய வீர விளையாட்டு!






பக்கம் 09



## துமிந்த விவகாரம்: உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஹிருணிகா

பக்கம் 05

தேசியம்
ஆசிரியர் பீடம்
தொலைபேசி : +94 76 567 3339
மின்னஞ்சல் : thesiyamnews@gmail.com
இணையம் : www.thesiyamnews.com



# கிழக்கின் மேய்ச்சல் தரைப்பிரச்சனைக்குத் தீர்வு?

கிழக்கின் மயிலத்தமடு, மாதவணையில் பசுக்களுக்கும் காளைகளுக்கும் அம்பாறை, பொலநறுவை மாவட்டங்களைச் சேர்ந்த சிங்களவர்களால் இழைக்கப்படும் கொடுமைகள் சொல்லிலடங்காதவைகளாகக் காணப்படுகின்றன. விலங்குகளுக்கும் உயிரினங்களுக்கும் ஜீவகாருண்யம் சொல்லிக் கொடுத்த நம்மவர்களால் அங்கு நடைபெற்றுவரும் கொடுமைகளுக்கு முடிவுகட்ட முடியாதிருக்கிறது.

விவசாயமும் கால்நடை வளர்ப்பும் இணைந்தான தமிழர்களின் பாரம்பரியத்தில் கால்நடைகளுக்கு ஒரு முக்கிய பங்குண்டு. அந்தவகையில் தைப் பொங்கல் மற்றும் பட்டிப் பொங்கலும் சிறப்பு மிக்கது. இருந்தாலும் மட்டக்களப்பு மாதவணை, மயிலத்தமடு மேய்ச்சல்தரையில் அத்துமீறி குடியேறவும் பயிர்செய்யவும் முனையும் சிங்களப் பெரும்பான்மை ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ச்சியாக பசுக்களுக்கும் காளைகளுக்கும் கொடுக்கும் துயரம் சொல்லொணாததாகும்.

வெங்காய வெடி வைத்து அவற்றின் வாயில் கொடும் காயங்களை ஏற்படுத்தி உணவு உண்ணக்கூட முடியாததாக மாற்றி உயிரிழக்கச் செய்தல், பொறி வெடிகளின் மூலமும் சுருக்குகளின் மூலமும் அவற்றைக் கொலை செய்தல், சுட்டும், வெட்டியும், மின்சாரம் பாய்ச்சியும் இந்த பசுக்களுக்கும் காளைகளிற்கும் துன்பங்களை ஏற்படுத்தல் எனத் தொடரும் கொடுமைகளுக்கு அரசாங்கமோ அரசியல் தரப்பினரோ முடிவினைக் காணமுடியாதிருக்கிறது.

கிழக்கில் யுத்த மௌனிப்புக்குப் பின்னர் தொடங்கிய மட்டக்களப்பின் மேய்சல் தரை மீதான சிங்களப் பெரும்பான்மையினரின் அத்துமீறல்கள், ஆக்கிரமிப்புக்கள் படிப்படியாக அதிகரித்து பண்ணையாளர்களுக்கு பெரும் நெருக்கடியைக் கொண்டுவந்தது. அது இன்னமும் தீர்க்கப்படாததொன்றாக மாறி வளர்ந்து நிற்கிறது.

மேய்ச்சல் தரைப் பிரதேசத்தில் நடைபெற்று வருகின்ற அத்துமீறல்களுக்கும் கொடுமைகளுக்கும் தீர்வு கிடைக்க வேண்டி பண்ணையாளர்கள் ஏறாத இடமில்லை, கோரிக்கை விடுக்காத ஆட்களில்லை எனும் அளவுக்கு நிலைமை ஏற்பட்ட போதும் அடிமட்டம் முதல் உயர்மட்டம், அதியுயர் மட்டமும் கூட தீர்த்து வைக்காததொன்றாக மாறியது. அதனால் பண்ணையாளர்கள் சத்தியாக்கிரகப் போராட்டத்தினை ஆரம்பித்தனர்.

நான்கு மாதங்களைத் தாண்டிவிட்ட போராட்டத்திற்கு இதுவரையில் தீர்வு கிடைக்கவில்லை. ஜனாதிபதி மட்டக்களப்புக்கு விஜயம் செய்த வேளை நடைபெற்ற பேச்சின் பயனால் வழங்கப்பட்ட முடிவுகள் பயனற்றுப் போயின. நீதிமன்றத் தீர்ப்புகள் கூட சரியாக அமுல்படுத்தப்படாத, அமுல்படுத்த முடியாததாகக் காணப்படுகிறது. இப்பொழுதும் கூட சுட்டும், வெட்டியும், மின்சாரம் பாய்ச்சியும் இந்த பசுக்களுக்கும் காளைகளிற்கும் ஏற்படுத்தப்பட்டு வரும் கொடுமைகள் பூரணமாக நிறுத்தப்பட வேண்டும் என்பதே பண்ணையாளர்களின் கோரிக்கையாக இருக்கிறது.

அரசினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும், நீதிமன்றத் தீர்ப்புக்களும் முறையாக அமுல்செய்யப்படுவது உறுதிப் படுத்தப்படவில்லை, கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரைகளில் நடைபெறும் சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கு முடிவில்லை எனத் தொடரும் நிலையில் எதனை செய்வதென்று தெரியா நிலையிலேயே பண்ணையாளர்கள் காணப்படுகின்றனர். அத்துமீறலாளர்களால் மேற்கொள்ளப்படும் கொடுமைகளால் இழக்கப்படுவது கால்நடைகளின் உயிர்கள் மாத்திரமல்ல பண்ணையாளர்களின் பொருளாதாரமும் தமிழர்களின் பொருளாதாரமுமாகும்.

இதற்கான தீர்வு மேய்ச்சல்தரைக்கான சட்டரீதியான பிரகடனமும், சட்டவிரோத நடவடிக்கைகளின் நிறுத்தம் மற்றும் பண்ணையாளர்களுக்கான முழுமையான பாதுகாப்புமே. இருந்தாலும் அது எட்டப்படுவது எப்போது என்பதே கேள்வி.

மயிலத்தமடு மாதவணை பிரதேச கால்நடை வளர்ப்பாளர்களது சுழற்சி முறையிலான உண்ணா விரதப் போராட்டம் 125 நாளையும் கடந்து சென்று கொண்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவருடைய பிரச்சினைகள், தேவைகள் முக்கியமானதாக இருந்துவிடுகின்றன. அதனால் ஏற்படுவதே பாகுபாடும் பாரபட்சமும், ஓரங்கட்டலும், முன்னுரிமைகளுமாகும்.

மட்டக்களப்பு - சித்தாண்டிச் சந்தியில் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் மயிலத்தமடு மாதவணை பண்ணையாளர்கள் தமக்கான நீதியைக்கோரி வருகின்றனர். பரம்பரை பரம்பரையாக பண்ணை வளர்ப்புக்கெனப் பயன்படுத்தி வந்த காணிகளில் அத்துமீறி பயிர்ச்செய்கையில் ஈடுபட்டதோடு, குடியிருப்புகளையும் அமைத்துவருகின்ற அம்பாறை, பொலநறுவை மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க முடியாதளவிலேயே பொலிஸ்த் தரப்பு இருந்துவருகிறது.

மயிலத்தமடு, மாதவணை பிரதேசம் 1974ஆம் ஆண்டு காலப்பகுதியிலிருந்து மேய்ச்சல் தரையாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. வட கிழக்கில் போர் முடிந்த கையோடு அத்துமீறிய குடியேற்ற சம்பவங்கள் இங்கு இடம்பெற்ற போது அவற்றினைத் தடுப்பதற்கு சரியான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. இவர்களை வெளியேற்றுவதற்கு கிழக்கு முதலமைச்சர் மற்றும் ஆளுநர்களால் 2009களில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அப்போது முழுமையான பயனைத் தரவில்லை. ஆனாலும் சிறிதளவு தணித்திருந்தது என்பது உண்மை.

அதேநேரம், 2015இல் ஆட்சி மாற்றத்தையடுத்து 2016இல் அத்துமீறலாளர்களுக்கெதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டதோடு, நீதிமன்றக் கட்டளையின் அடிப்படையில் அனைவரும் வெளியேற்றப்படுவார்கள் என்று மகாவலி அதிகார சபையினால் உறுதியளிக்கப்பட்டது. இருந்தாலும் அது முழுமையாக நடைபெற்றிருக்கவில்லை. கிழக்கு மாகாணசபை 2017 செப்டெம்பரில் கலைக்கப்பட்டதையடுத்து அத்துமீறலாளர்களது நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பித்தன. கோட்டாபய ராஜபக்ச ஜனாதிபதியானதும் இந்த அத்துமீறல்கள் பூதாகாரமானது. அதற்கு முழுமையான ஒத்துழைப்பையும் உந்துதல் உதவிகளை வழங்கியவர் முன்னாள் கிழக்கு ஆளுநர் அனுராதா ஜகம்பத் ஆவார்.

மாவட்டத்தில் நடைபெறும் விவசாய ஆரம்பக் கூட்டங்களில் விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் கால்நடைகளை அதற்கு ஒதுக்கப்பட்ட இடமான மயிலத்தமடு, மாதவணை போன்ற இடங்களுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் அங்கு கால்நடைகளைக் கொண்டு செல்ல முடியாத காரணத்தினால் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன.

மயிலத்தமடு - மாதவணை பிரதேசத்தில் மேய்ச்சல் தரைக்கான பகுதி அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

ஏறாவூர் பற்று பிரதேச செயலகப்பிரிவின் ஈரணைக்குளம் கிராம சேவையாளர்பிரிவில் 6383 ஹெக்டையரும், கோரளைப்பற்று தெற்கு பிரதேச செயலாளர் பிரிவின் குடும்பிமலை கிராம சேவையாளர் பிரிவில் 9969 ஹெக்டெயரும் முன்மொழியப்பட்டுள்ளன. இருப்பினும் அது வர்த்தமானி அறிவித்தலாக வெளியிடப்படவில்லை. அது நிறைவேறாமையினாலேயே இப்பிரச்சினை நீண்டகாலப் பிரச்சினையாக மாறிவிட்டிருக்கிறது.

அம்பாறை- கல்லோயா குடியேற்றம், திருகோணமலை - அல்லை- கந்தளாய் குடியேற்றம் என பல குடியேற்றங்களை கிழக்கில் ஏற்படுத்தி கிழக்கில் தமிழர்களுடைய இனப் பரம்பலைக் குறைத்தது மாத்திரமல்லாமல் மட்டக்களப்பு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அம்பாறை மாவட்டம் தனியான மாவட்டமாக அறிவிக்கப்பட்டது. தமிழர்களுடைய இனப்பரம்பல் கிழக்கின் திருகோணமலை, அம்பாரை மாவட்டங்களில் குறைந்து கொண்டே வருகிறது. மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரமே பெரும்பான்மையாக தமிழர்கள், தமிழ் பேசும் மக்கள் வாழுகின்ற மாவட்டமாக இருந்துவருகிறது. அந்தவகையில் இனப்பரம்பலை மாற்றுகின்ற செயற்பாடாகவே மட்டக்களப்பு மாவட்டத்தின் மேய்ச்சல்தரைப் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் குடியேற்ற நடவடிக்கைகள் பார்க்கப் படவேண்டும்.

அத்துமீறுவோர் தமது இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள முனைந்துவருகின்றனர். இந்த அத்துமீறல் நிறுத்தப்படுவதும் , குடியேறியுள்ளவர்கள் வெளியேற்றப்படுவதும் பண்ணையாளர்களுக்கும், கால்நடைகளுக்கும் பாதுகாப்பு வழங்குவதும் யாரால் முடிந்தகாரியம் என்பது வினாவாக இருக்கிறது.

# ரணிலின் போக்கால் ஆபத்து! எச்சரிக்கின்றது ஆசிரியர் சங்கம்



**ஹவுத்தி கிளர்ச்சியாளர்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் பாதுகாப்பு நடவழக்கைக்கு கப்பலை அனுப்பும் முடிவை எவரிடம் கேட்டு ஜனாதிபதி எடுத்தார்? என்று கேள்வி எழுப்பியுள்ளார் இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின்.**

தமக்கு எதிராகச் செயற்படும் நாடுகளுக்கு எதிராக செயற்படுவோம் என ஹவுத்தி கிளர்ச்சியாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர். அப்படியொரு பிரச்சினை இந்நாட்டுக்கு வந்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்கவேண்டும். தன்னிச்சையான முறையிலேயே ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார். இதன் மூலம் நாட்டின் எதிர்காலம் ஆபத்துக்குள் தள்ளப் பட்டுள்ளது.

தமக்கு எதிராக மனித உரிமை விவகாரங்களை எழுப்பும் நாடுகளை சமாளிக்கவே இவ்வாறு கப்பல் அனுப்ப முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

# மனித உரிமை விவகாரங்களில் இரட்டை வேடம்போடும் உலக தலைவர்கள்

## சர்வதேச மனித உரிமை அறிக்கை

உலக நாடுகளின் தலைவர்கள் சட்டங்களை நடைமுறைப்படுத்த தவறுவதான் உரிமைகள் வீழ்ச்சியடைந்துள்ளன என சர்வதேச மனிதஉரிமை கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச சட்டங்களை நிறைவேற்றவேண்டிய தங்கள் கடப்பாட்டினை உலக தலைவர்கள் புறக்கணிப்பதால் உலகம்முழுவதும் மனித உரிமை நிலவரம் மோசமடைந்துள்ளது என சர்வதேச மனித் உரிமை கண்காணிப்பகம் தனது வருடாந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அறிக்கையில் சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகம் சர்வதேச அளவில் அதிகரிக்கும் மனித உரிமை நெருக்கடிகள் குறித்து கடுமையாக எச்சரித்துள்ளது.

யுத்தகால அநீதிகள் பல மடங்காக அதிகரிகின்றன மனித உரிமை பாதுகாவலர்கள் மீதான ஒடுக்கு முறை சர்வதேச மனித உரிமை கொள்கைகள் சட்டங்கள் தாக்குதலிற்குள்ளாகின்றன அரசாங்கங்கள் அவற்றை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன.

மனித உரிமை மீறல்கள் குறித்து தெரிவுசெய்து சீற்றத்தை வெளிப்படுத்துதல் பரிவர்த்தனை இராமந்திரம் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் சட்டங்களை அங்கீகரிப்பதில் இரட்டை நிலைப்பாடுகள் போன்ற வற்றினால் ஆயிரக்கான உயிர்களிற்கு ஆய்ந்து ஏற்பட்டுள்ளது.

இர்ரேன் ஹமாஸ்
மோதலில் வெளிப்படையாக தெரியும் இரட்டை நிலைப்பாடுகளிற்கு அப்பால் ஏனைய மனித உரிமை விவகாரங்களிலும் இரட்டை நிலைப்பாடுகள் காணப்படுகின்றன.

மனித குலததிற்கு எதிரான சீன அரசாங்கத்தின் குற்றங்கள் தொடர்பில் மௌனம் கடைப்பிடிக்க படுகின்றது. உக்ரைனில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து பொறுப்புக்கூறலும் நீதியும் அவசியம் என உரத்த குரலில் வேண்டுகோள்கள் விடுக்கப் படும்.அதேவேளை ஆப்கானில் அமெரிக்காவின் மனித உரிமை துஸ்பிரயோகங்கள் குறித்து மௌனம் காக்கப் படுகின்றது. எனவும் சர்வதேச கண்காணிப்பகம் தெரிவித் துள்ளது

# 2001 பொங்கு தமிழ் பிரகடனம்: அடக்கு முறைக்கு எதிரான பேரெழுச்சி!

தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணய உரிமை, மரபுவழித் தாயகம் மற்றும் தமிழ்த் தேசியம் என்பன அங்கீகரிக்கட வேண்டும் என கோரிக்கைகளை வலியுறுத்தி 2001 ஆண்டு ஜனவரி மாதம் 17 ஆம் திகதி இராணுவ அடக்குமுறைக்கு மத்தியில் யாழ் பல்கலைக்கழகத்தில் மக்கள் பேரெழுச்சியாக 2001 பொங்கு தமிழ் பிரகடனம் செய்யப்பட்டது.

பொங்கு தமிழ் பிரகடனத்தை நினைவுபடுத்தும் முகமாக அப்போதய யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் நினைவுத் துபியும் திறந்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. பொங்கு தமிழ் பிரகடனம் ஆனது, ஈழத்தில் இராணுவ அடக்கு முறைக்கு எதிரான மக்கள் பேரெழுச்சியின் உச்சமே இப் பிரகடனமாகும்.

இதன் முழுவிபரம் வருமாறு, "ஈழத் தமிழ் மக்களின் சுதந்திர தாயகத்துக்கான அடிப்படை அபிலாசைகளையும் நியாயங்களையும் சர்வதேசத்துக்கு ஒரே குரலில் தமிழ் மக்கள் வெளிப்படுத்திய தளமாக பொங்கு தமிழ் அமைந்தது.

சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்த தமிழரின் மரபுவழித் தாயகமும், அதனால் சிதைக்கப்பட்டிருக்கும் தன்னாட்சி உரிமையையும் வேண்டிநின்ற தமிழ் மக்கள், தமிழ் தேசியத்தின்பால் தாம் கொண்டுள்ள ஆழமான விடுதலை உணர்வை வெளிக்கொணர்வதற்கும், வலியுறுத்துவதற்குமாக யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களால் யாழ்.பல்கலைக்கழகத்தில் மக்கள் பேரெழுச்சியாக திரண்ட நிகழ்வே 'பொங்கு தமிழ்' ஆகும்.

இதனைத் தொடர்ந்து, ஈழத்தின் அனைத்து மாவட்டங்களிலும், புகலிட தேசங்களிலும் பொங்கு தமிழாய் எம் மக்கள் விடுதலைக்காய் பேரெழுச்சி கொண்டனர்.

ஈழப்போரின் உச்சக்கட்ட காலங்கலான 2001இல் யாழ். மண்ணில் இராணுவத்தினரின் அடக்குமுறைகளையும், கொலை அச்சுறுத்தல்களையும், வீதி மறிப்புக்களையும், கெடுபிடியான சோதனை நடவடிக்கைகளையும் தாண்டி, குடியிருப்புக்களின் மதில்களினால் பாய்ந்தும், குறுக்கு பாதைகளினாலும் இளைஞர்கள், முதியவர்கள், மதகுருமார், பெண்கள், மாணவிகள் என்ற பாகுபாடின்றி திரண்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுடன் பேரெழுச்சி கொண்டு 2001ஆம் ஆண்டு பொங்குதமிழ் பொங்கிப் பிரவாகித்து நின்றது.

சிறிலங்கா அரசாங்கத்தின் கொடுமைகளுக்கு எதிராகவும் தமிழ் தேசத்தின் திட்டமிட்ட அழிப்பிற்கு எதிராகவும் அவற்றைத் தகர்த்தெறிந்து எழுச்சி கொண்டு தமிழ் மக்கள் தமது உரிமைக் குரலை உயர்த்தி வெளிப்படுத்திய எழுச்சி மிக்க பிரகடனமே பொங்கு தமிழாகும்.
இந்நிகழ்வு நடைபெற்று இன்றுடன் 23 ஆண்டுகள் நிறைவடைகின்றது. எனினும் பேரினவாத அடக்கு முறைக்குள் சிக்குண்டு எமது தேசத்தின் தாங்குதுாண்கள் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழர் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்க பின்வரும் தீர்மானங்களை வலியுறுத்தி யாழ்.பல்கலைக்கழகத்தில் மக்கள் பேரெழுச்சியாக 'பொங்கு தமிழ்' பிரகடனம் அறைகூவப்பட்டது.



1. வடக்கு கிழக்கு இணைந்த தமிழரின் தாயகம் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
2. தமிழரின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும்.
3. தமிழ் தேசமும் அதன் தனித்துவமான இறைமையும் அங்கீகரிக்கப்படல் வேண்டும்

என வலியுறுத்தி இப்பிரகடனம் வெளியிடப்பட்டது.

**பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு** :
யாழ்.பல்கலைக்கழகத்தின் பொங்கு தமிழ் பிரகடனத்தின் 23ஆம் ஆண்டு நிறைவு நாள் இன்று கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர், மாணவர்கள், இணைந்து பல்கலைக்கழக கலைப்பீட வளாகத்திற்குள் அமைந்துள்ள பொங்குதமிழ் நினைவு தூபி முன் கூடி பொங்குதமிழ் பிரகடன நிறைவு நாளை நினைவு கூர்ந்திருந்தனர்.
இதன் போது, யாழ். பல்கலைக்கழகத்தில் தொடர்ந்தும் மேற்கொண்டு வந்த தமிழ் தேசிய நிலைப்பாடு தற்போது அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ளதாக மாணவர் ஒன்றியம் கூறியுள்ளது.

இந்த நிறைவு நாளில், பொங்குதமிழ் பிரகடனம் வாசிக்கப்பட்டது. இவ் எழுச்சி நிகழ்வில் வைத்து தமிழ் மக்களின் அபிலாசைகளான சுயநிர்ணைய உரிமை, மரபுவழித்தாயகம், தமிழ் தேசியம் என்பவை அங்கிகரிக்கப்பட வேண்டும் என்பவை பொங்குதமிழ் பிரகடனமாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது.
இரண்டு தசாப்தங்கங்களை கடந்த நிலையிலும் பொங்கி வழிந்த பொங்குதமிழ் பிரகடனம் ஈழத்தமிழரின் விடுதலை வேட்கையை இன்னமும் ஓர்மத்துடன் பேணி வருகிறது.

# யுக்திய நடவடிக்கையை நிறுத்தோம்! ஐ.நாவை சாடிய பொதுப்பாதுகாப்பு அமைச்சர்!

இலங்கையில் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ள, போதைப்பொருள் ஒழிப்பு மற்றும் போதைப்பொருள் பாவனையை கட்டுப்படுத்துவதற்கான விசேட சுற்றிவளைப்பு தேடுதல் மற்றும் கைது நடவடிக்கையான நடவடிக்கையான 'யுக்திய'வை நிறுத்த முடியாது என பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இந்த கைதுகள் குறித்து கவலை வெளியிட்ட ஐ.நா விமர்சனங்களைப் புறந்தள்ளியுள்ளும் வகையில் அமைச்சர் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

"யாருடைய அறிக்கையை அடுத்தும் நாங்கள் நிறுத்த மாட்டோம், அப்படித்தான் நடப்போம்" என பொதுப் பாதுகாப்பு அமைச்சர் கூறியுள்ளார்.
அவிசாவளை பிரதேசத்தில் சமூகப் பொலிஸ் குழுவால் கடந்த வார இறுதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அமைச்சர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் பரபரப்புடன் முன்னெடுக்கப்படும் அந்த நடவடிக்கையை 'சட்டத்தை அமுல்படுத்த மிகவும் கடுமையான வகையில்' முன்னெடுக்கப்படும் நடவடிக்கை என ஐ நாவின் மனித உரிமைகள் ஆனககுழு விமர்சித்துள்ளது. 'ஒபெரேஷன் யுக்திய (நீதி)' என பெயரிடப்பட்டு கடந்த ஆண்டு டிசம்பர் 17ஆம் திகதி ஆரம்பமான நடவடிக்கையில், சந்தேகத்தின் அடிப்படையில் 25,000 அதிக மானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

'யுக்திய' நடவடிக்கையை இலங்கை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்றும், மனித உரிமைகள் அடிப்படையில் இதை அணுக வேண்டும் எனவும், ஐ.நா மனித உரிமைகள் ஆணையர் வோல்கர் டுர்க் வலியுறுத்தியுள்ளார்.

"இந்த நடவடிக்கையின் முன்னரும் பின்னரும், மக்கள் ஏராளமான விதிமீறல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். அதில் அனுமதி பெறாமல் சோதனைகளை நடத்துவது, சட்டவிரோத கைதுகள் மற்றும் தடுத்து வைப்பது, மோசமாக நடத்துவது, சித்திர வதை செய்வது மற்றும் பொது இடங்களில் நிர்வாணப்படுத்தி சோதனையிடுவது ஆகியவை இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது" என ஐ நா மனித உரிமைகள் ஆணையாளரின் பேச்சாளர் லிஸ் தொர்செல் இம்மாதம் 12ஆம் திகதி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

பெயரிடப்படாத சில சட்டத்தரணிகள் மற்றும் அமைப்புகளே ஐ.நாவிற்கு தகவல்களை அளிப்பதாக குற்றஞ்சாட்டிய அமைச்சர், அவர்களை 'தேசத்திற்கு எதிராகச் செயற்படும் போலிக் கும்பல்கள்' என்வும் சாடினார்.
"அப்படிச் சிலர் உள்ளனர், அவர்கள் கைநிறைய பணத்திற்காகச் செய்கின்றனர். தன்னார்வ அமைப்பிடமிருந்து பணம் வருகிறது. பணம் வரும் போது அறிக்கைகளும் வெளியிடப்படுகின்றன".

இலங்கையில் போதைப் பொருட்களுக்கு அடிமையாகியுள்ளவர்களை எதிர்கொள்ளும் அரச பாதுகாப்பு படைகளின் இந்த கடும்போக்கு நடவடிக்கையை ஐ.நா கடுமையாக விமர்சித்துள்ளது.

"போதைப் பொருட்களை விற்பவர்கள் அல்லது கடத்துபவர்கள் என்று சந்தேகிக்கப்படும் நபர்களும் மனிதாபிமான நடவடிக்கைக்கு உரியவர்களே, அவர்களுக்கும் முழு மரியாதையும் வெளிப்படையன வழிமுறைகளும், நேர்மையான விசாரணைகளும் தேவை" என கூறியுள்ள ஐ.நா, அதேவேளை "அதிகார துஷ்பிரயோக, சித்திரவதை, மோசமாக நடத்தப்படுதல், மற்றும் நியாயமான விசாரணைகள் மறுக்கப்படுவது போன்று எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் ஆகியவை பாரபட்சமின்றி முழுமையாக விசாரிக்கப்பட்டு நீதி வழங்கபப்ட வேண்டும்" எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதுவேளை, சமூகத்தை வேவு பார்க்குமாறு நாட்டின் பொலிஸ் மாஅதிபர் வெளிப்படையாகவே கோரியுள்ளார்.

"தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவது எமது குழுவின் பிரதான நோக்கமாகும்" என பதில் பொலிஸ் மா அதிபராக இருக்கும் தேசபந்து தென்னகோன் கோரியுள்ளார்.

"ஒவ்வொரு வீட்டிலும் யார் இருக்கின்றார்கள் என கிராம பிரஜா பொலிஸ் குழு உறுதிப்படுத்த வேண்டும். அந்த சமயத்தில்தான் பிரிவினைவாதிகளுக்கு, தீவிரவாதிகளுக்கு, மத பிரிவினைவாதிகளுக்கு எங்கள் பிரதேசத்திற்கு வந்து வாடகைக்கு வீடுகளை எடுத்து அழிவுகரமான செயல்களை மேற்கொள்ள எமது கிராமத்தில் வாய்ப்பில்லை என சான்றுப்படுத்த முடியும்".

கிராம சேவகர்களிடம் இருக்கும் வாக்காளர்கள் பட்டியல் மற்றும் குடியிருப்பாளர்களின் பட்டியலை வைத்துக்கொண்டு உள்ளூர் வாசிகளின் தனிப்பட்ட தகவல்களை பொலிசாருக்கு வழங்குமாறு பதில் பொலிஸ் மா அதிபார் அந்த குழுவின் உறுப்பினர்களை வலியுறுத்தியுள்ளார்.

விளம்பர
தொடர்புகளுக்கு
Mobile :
+94 777 163990



# வடக்கில் படங்காட்டிய ஜனாதிபதி கிழக்கில் படங்காட்டிய ஆளுநர்!

புதிய ஆண்டு பிறந்த கையோடு ஜனாதிபதி வடக்கிற்கு வருகை தந்த அதே காலப் பகுதியில்,அவருடைய ஆளுநர் கிழக்கில் மிகப்பெரிய பண்பாட்டு விழா ஒன்றை அரங்கேற்றியிருக்கிறார்.

வடக்கில் ஜனாதிபதி பல்வேறு தரப்புகளையும் சந்தித்தார். தொழில்முனைவோர், பல்கலைக்கழகப் பிரமுகர்கள், குடிமக்கள் சமூகம் என்று சொல்லப்பட்டவர்கள்,அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், இசைத்துறையில் விளையாட்டு துறையில் பளுதூக்கும் போட்டியில் சாதனை புரிந்தவர்கள், வடக்கில் கல்விப் பெறுபேறுகளில் சாதனை புரிந்தவர்கள், அரச உயர் அதிகாரிகள்,தனது கட்சிப் பிரதிநிதிகள் என்றிவ்வாறாக பல்வேறு தரப்பட்டவர்களையும் சந்தித்திருக்கிறார். அவர் யாரைச் சந்திக்க வேண்டும் ,சந்திக்கக் கூடாது என்பதனை அவருக்கு இணக்கமான வடக்கில் உள்ள அரசியல்வாதிகள் தீர்மானித்திருக்கிறார்கள்.

குறிப்பாக யூ எஸ் ஹோட்டலிலும், பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியிலும் உரையாற்றும் பொழுது, அவர் பேசியவற்றின் சாராம்சம் என்னவென்றால், மாகாண சபைகளுக்கு போதிய அதிகாரங்கள் உண்டு மேல் மாகாணத்தில் கட்டியெழுப்பப்பட்டு இருப்பது போல பிராந்திய பொருளாதாரங்களைக் கட்டி எழுப்புங்கள் மாகாண சபைகளின் நிதி அதிகாரம் அதற்குப் போதுமானது முதலீட்டுக்கு எனது கையைப் பார்த்துக் கொண்டிராதீர்கள் புலம்பெயர்ந்த தமிழர்களிடமிருந்து நிதி உதவிகளையும் துறை சார்ந்த உதவிகளையும் பெற்றுக் கொள்ளுங்கள் அதற்கு நாம் ஒத்துழைப்போம் என்பதுதான். அதிலும் குறிப்பாக அவர் பொருளாதார வளர்ச்சிக்கு உதாரணங்களாக ஜப்பான், கொரியா,பிரித்தானியா போன்ற ஒற்றையாட்சி நாடுகளை எடுத்துக் காட்டியிருக்கிறார். அங்கேயெல்லாம் கூட்டாட்சி இல்லை,ஆனாலும் அந்நாடுகள் பொருளாதாரரீதியாகச் செழிப்பாகக் காணப்படுகின்றன என்ற பொருள்பட யூ எஸ் ஹோட்டலில் அவர் பேசியிருக்கிறார்.

மாகாண சபைகள் இயங்காத ஒரு பின்னணியில், இப்போதைக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்தும் நோக்கம் இல்லாத ஒரு ஜனாதிபதி, மாகாண சபைகளுக்கு உள்ள நிதி அதிகாரத்தைப் பயன்படுத்துங்கள் என்று கூறுகிறார். விக்னேஸ்வரன் முதலமைச்சராக இருந்த காலகட்டத்தில் வடமாகாண சபையானது முதலமைச்சர் நிதியம் ஒன்றை உருவாக்க முயற்சித்தது. ஏற்கனவே அதையொத்த நிதியம் மேல் மாகாணத்தில் உண்டு. ஆனால் மத்திய அரசாங்கம் அதற்கு அனுமதி வழங்கவில்லை.ஆனால் ஜனாதிபதி கூறுகிறார்,13 ஆவது திருத்தத்துக்குள் எல்லா அதிகாரங்களும் உண்டு என்று.

அப்படியென்றால் அவர் 2015 இலிருந்து பிரதமராக இருந்த காலகட்டத்தில் கூட்டமைப்போடு சேர்ந்து உருவாக்க முயற்சித்த "எக்கிய ராஜ்ய" என்ற தீர்வு முயற்சிக்குப் பொருள் என்ன? மாகாண சபைக்குள்ள அதிகாரங்கள் போதும் என்றால் எதற்காக அப்படி ஒரு ஏக்கிய ராஜ்ஜிய என்ற புதிய ஏற்பாட்டை குறித்து சிந்தித்திருக்க வேண்டும்?இது பற்றி யாராவது அவர்களிடம் கேள்வி கேட்டார்களோ? தெரியவில்லை. ஆனால் வழமையாக இனப்பிரச்சினைக்கு என்ன தீர்வு என்று கேட்கும் வடக்கு இந்த முறை அது போன்ற கேள்விகளைக் கேட்கவில்லை என்று அவர் தனக்கு நெருக்கமானவர்களுக்குச் சொன்னதாக ஒரு தகவல்.

இவ்வாறு ஜனாதிபதி வடக்கில்,படம் காட்டி,படம் எடுத்து,றியோ கிறீம் ஹவுசில் ஐஸ்க்ரீமும் அருந்தி,பதின்மூன்றுக்குள் எல்லாம் உண்டு என்று கூறிய அதே காலப்பகுதியில், கிழக்கில் அவருடைய ஆளுநர் பெருமெடுப்பில் ஒரு பண்பாட்டு பெருவிழாவை ஒழுங்குபடுத்தியிருந்தார். கிட்டதட்ட இரண்டு தசாப்தங்களுக்கு முன் நோர்வேயின் அனுசரணையோடு பேச்சுவார்த்தைகள் நடந்த காலகட்டத்தில், திருகோணமலையில் நடந்த "மானுடத்தின் ஒன்று கூடலுக்குப்" பின் அங்கே நடந்த மிகப்பெரிய அளவிலான ஒன்றுகூடல் அது வென்று கூறலாம்.அதை ஒரு மெகா நிகழ்வாக ஆளுநர் திட்டமிட்டு நடத்தியிருக்கிறார்.அதற்கு இந்தியாவின் உதவிகளையும் பெற்றிருக்கிறார். அதன்மூலம் தமிழ் மக்களுக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பண்பாட்டு ரீதியிலான பிணைப்புக்களைப் பலப்படுத்தும் முயற்சிகளை வடக்கிலிருந்து கிழக்கிற்கும் விஸ்தரிக்கும் ஒரு எத்தனம் அது. அப்படி ஒரு பண்பாட்டு விழாவிற்கு இந்தியா பக்கத்துணையாக இருக்கிறது என்பது சிங்கள கடும்போக்குவாதிகளை கோபப்படுத்துமா?அல்லது பயப்படுத்துமா? என்பதனைப் பொறுத்திருந்து பார்க்கலாம்.

குறிப்பாக ஜல்லிக்கட்டு அல்லது ஏறு தழுவுதல் நிகழ்ச்சிக்கு பயிற்சியாளர்கள் முதற்கொண்டு,சிறப்பு விருந்தினர்கள், அறிவிப்பாளர்கள் வரை தமிழகத்தில் இருந்து தருவிக்கப்பட்டிருக்கிறார்கள். பொங்கல் பெருவிழாவில் ஆயிரக்கணக்கானவர்களை அந்த மைதானத்தில் திரட்டி, நூற்றுக்கணக்கில் பெண்களை ஆட வைத்து,தமிழ் மக்கள் மத்தியில் ஒரு எழுச்சியை அவர் ஏற்படுத்தியிருக்கிறார். அந்நிகழ்வில் உரையாற்றிய சாணக்கியன் தமிழர்களின் தலைநகர் என்று அழைக்கப்படும் திருகோணமலை என்று உச்சரிக்கிறார்.

திட்டமிட்ட சிங்கள குடியேற்றங்களின் மூலம் அதிகம் சிங்கள மயப்படுத்தப்பட்ட ஒரு தமிழ் மாவட்டம் திருக்கோணமலை ஆகும்.



நிலாந்தன்

இப்பொழுதும் அங்கே குன்றுகளாகக் காணப்படும் பிரதேசங்களில் விகாரைகள் கட்டப்பட்டு வருகின்றன.ஒரு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் திலீபனின் ஒளிப் படத்தை,வாகன ஊர்தியில் எடுத்துச் சென்ற போது தாக்கப்படும் அளவுக்கு அங்கு தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பற்ற ஒரு நிலைமை உண்டு.அப்படிப்பட்ட ஒரு மாவட்டத்தில் பெருமெடுப்பில் ஒரு தமிழ்ப் பண்பாட்டு விழாவை ஆளுநர் செந்தில் தொண்டமான் ஒழுங்கமைத்திருக்கிறார்.

அவர் ஓர் அரச ஊழியர். ஜனாதிபதியின் பிரதிநிதி.ஆனால் நிகழ்வில் அவருக்கு தரப்பட்ட முக்கியத்துவம் அவரை அங்கு கூடியிருந்தவர்கள் வரவேற்ற விதம் என்பவற்றைத் தொகுத்துப் பார்க்கும்பொழுது அவருக்கு அங்கே ஒரு கதாநாயக அந்தஸ்து வழங்கப்பட்டது.அவர் பேசுவதற்காக மேடையை நோக்கி வந்த பொழுது "அலப்பறை கிளப்புறோம்" என்ற ரஜினி படப்பாடல் ஒலிக்க விடப்பட்டது. அவர் ஒரு கதாநாயகனைப் போல மேடையை நோக்கி வந்தார். வரும் வழியில் நடனம் ஆடிய பெண்கள் அவரை நிறுத்தி கைகுலுக்கி செல்ஃபி எடுத்துக் கொண்டார்கள். அதாவது ஒரு நிர்வாக அதிகாரி கதாநாயகனாக கட்டமைக்கப்பட்டிருக்கிறார்.

ஆனால் அந்த பண்பாட்டு விழா நடந்து கொண்டிருந்த அதே மாகாணத்தில், மட்டக்களப்பில்,மயிலத்தமடுவில் மேய்ச்சல் தரையை மீட்பதற்கான போராட்டம் 125 ஆவது நாளைக் கடந்து விட்டது. அது மட்டுமல்ல, கிழக்கில் அண்மையில் பெய்த கடும் மழையால்,பல பகுதிகளில் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி நிவாரணங்களை வழங்கி வருகின்றது. அந்த ஒளிப்படங்கள் முகநூலில் பகிரப்படுகின்றன.ஒரு பகுதி வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு மாகாணத்தில், இது போன்ற மெகா பண்பாட்டு நிகழ்வுகள் அவசியமா என்ற கேள்விகள் உண்டு. மேய்ச்சல் தரைக்காகப் போராடும் விவசாயிகள் வெள்ளத்தில் நிற்கிறார்கள் அவர்களுடைய நாட்டு மாடுகளை வெட்டிக் கொல்லப்படுகின்றன அல்லது சுருக்கு வைத்துப் பிடிக்கப்படுகின்றன. இதற்கெல்லாம் தீர்வைப் பெற்றுக் கொடுக்க முடியாத ஓர் ஆளுநர்,காளை மாடுகளை அடக்கும் போட்டிகளை ஒழுங்கு படுத்துகிறார் என்ற விமர்சனங்களும் எழுந்தன.

செந்தில் தொண்டமான் ஆளுநராக நியமிக்கப்பட்டதிலிருந்து தமிழ் மக்களைக் கவரும் விதத்தில் எதையாவது செய்ய முயற்சிக்கின்றார்.எனினும் சிங்கள பௌத்தமயமாக்கலையும் நிலப்பறிப்பையும் அவரால் தடுத்துநிறுத்த முடியவில்லை. அதில் அவருடைய அதிகாரம் வரையறைக்கு உட்பட்டது என்பதனை பௌத்த மதகுருமார் நிரூபித்து வருகிறார்கள்.அவ்வாறு தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத ஓர் ஆளுநர்,வெள்ள அனர்த்த காலத்தில், பெருமெடுப்பில், பெருந்தொகை நிதியைச் செலவழித்து, ஒரு பண்பாட்டு விழாவை ஏற்பாடு செய்திருக்கிறார்.அதில் அவர் கதாநாயகனாகவும் கட்டமைக்கப்பட்டிருக்கிறார்.

எனவே கடந்த வாரம் வடக்கிலும் கிழக்கிலும் நடந்தவைகளைத் தொகுத்துப் பார்த்தால், மிகத் தெளிவான ஒரு செய்தி கிடைக்கின்றது. வடக்கில் ஜனாதிபதி பதின்மூன்றாவது திருத்தத்துக்குள் அதாவது மாகாண சபைக்குள் நிதி அதிகாரம் உண்டு என்று கூறுகிறார்.கிழக்கில் அவருடைய ஆளுநர் கதாநாயகனாக மேலெழுகிறார். 13ஆவது திருத்தத்தின் கீழ் உருவாக்கப்பட்ட மாகாண சபையின் ஆளுநர் ஒருவர் கிழக்கில் தமிழ் மக்களுக்கு உற்சாகமூட்டும் விழாக்களை ஒழுங்குபடுத்தியிருக்கிறார். அதனால் அவருக்கு வரவேற்பும் கவர்ச்சியும் அதிகரித்திருக்கின்றன.13ஆவது திருத்தத்

மிகுதி 05 பக்கம் பார்க்க...

# வடக்கில் படங்காட்டிய ...



தின் கீழ் மத்திய அரசின் பிரதிநிதியாக காணப்படும் ஆளுநர் ஒருவர் கதாநாயகனாக மேலுயர்ந்துள்ளார்.அதன் மூலம் ஆளுநர் சக்தி மிக்கவர் அவர் தமிழ் பண்பாட்டை பாதுகாக்கும் நடவடிக்கைகளை எடுப்பார் என்று நம்பிக்கையூட்ட முயற்சிக்கப்படுகின்றது. இவற்றின் மூலம் மாகாண சபையை ஒரு பலமான அதிகார கட்டமைப்பாக வெளிக் காட்டும் உள்நோக்கம் உண்டு. இதில் இந்தியாவை திருப்திப்படுத்தும் உள்நோக்க முண்டு.வடக்கில் ஒரு சந்திப்பின்போது ஜனாதிபதி இந்தியாவுக்கும் மன்னாருக்கும் இடையிலான தரைப்பாலம் பற்றியும் பேசியிருக்கிறார். அவர் அதை நிறைவேற்ற மாட்டார் என்பது புத்திசாலியான யாருக்கும் விளங்கும்.ஆனால் அவர் அப்படிச் சொல்கிறார்.13ஆவது திருத்தத்தை ஒரு தீர்வாக முன்வைப்பதன் மூலம்,இந்தியாவைத் திருப்திப்படுத்தும் வாக்குறுதிகளை வழங்குவதன் மூலம்,கிழக்கில் பண்பாட்டு பெருவிழாவில் இந்தியாவின் உதவிகளை பெற்றதன் மூலம்,அவர் இந்தியாவை சந்தோஷப்படுத்த விளைகிறார்.மாகாண சபைகளைப் பலமானவைகளாகக் காட்ட முயற்சிக்கின்றார்.

# தயார்நிலையில் இருக்குமாறு சகாக்களுக்கு ரணில் உத்தரவு!



இலங்கையின் சுதந்திரதினத்துக்குப் பின்னர் எந்நேரத்தில் வேண்டுமானாலும் தேசிய மட்டத்திலான தேர்தலொன்று நடத்தப்படலாம் எனவும், அதனை எதிர்கொள்ள தற்போதிருந்தே தயாராகுமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது சகாக்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். வெளிநாட்டுப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் தனக்கு நெருக்கமான அரசியல் பிரமுகர்களுடன் ஜனாதிபதி சந்திப்பொன்றை நடத்தியுள்ளார் எனவும், இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது என அறியமுடிகின்றது. இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகள் எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி நடைபெறவுள்ளது. அதேவேளை, எதிர்வரும் 24ஆம் திகதி ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர், ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் விசேட சந்திப்பொன்றையும் நடத்தவுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

# வீதியை புனரமைத்து தாருங்கள்!

## நூதன முறையில் கோரிக்கையை முன்வைத்த மீசாலை மக்கள்!






தென்மராட்சி- கொடிகாமம் பகுதியில் உள்ள வீதி ஒன்றினை புனரமைத்துத் தருமாறு கோரிக்கை முன்வைத்துள்ள அப்பகுதி மக்கள், வீதி புனரமைப்பு பணிகளுக்கு செலவிடக் கோரி ஒரு தொகை பணத்தினையும் வடமாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளனர். இந்த விடயம் தொடர்பில் மாகாண ஆளுநருக்கு கடிதமொன்றினையும் பிரதேச மக்கள் அனுப்பிவைத்துள்ளனர். குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:- தென்மராட்சி பிரதேச செயலக பிரிவின் ஜே/320 மற்றும் ஜே/321 ஆகிய கிராம சேவகர் பிரிவுக்கு நடுவே அமைந்துள்ள தட்டாங்குளம் பிள்ளையார் வீதியை மேற்குறித்த இருகிராம சேவகர் பிரிவில் உள்ள மக்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் பயன்படுத்தும் பிரதான வீதியாகும். பொதுமக்கள் பயணிக்கவே முடியாத நிலையில் பாரிய குழிகளுடன் இவ்வீதி காணப்படுகிறது. பாரிய குழிகள் காரணமாக அதிகளவான விபத்துக்களும் இடம்பெறுகின்றன. இவ்வீதி கடந்த 18 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாமலிருக்கும் குறித்த வீதியினை புனரமைத்து செய்து தருமாறு உரிய அதிகாரிகளுக்கு பல கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். இருப்பினும் இதுவரை எந்தவிதமான புனரமைப்பும் செய்யப்படாமல் உள்ளது. குறித்த வீதியை உடனடியாக புனரமைத்து தரவேண்டும் என்று கோரிக்கையினை முன் வைக்கின்றோம். இவ்வீதி புனரமைப்பிற்காக எமது பகுதியில் வசிக்கும் ஒவ்வொருவரிடமும் இருந்து ஒரு நாள் வேதனமான (ஆயிரம் ரூபாவை) சேகரித்து வங்கியூடாக சுமார் 96 ஆயிரம் ரூபா வினை காசோலையாக அனுப்பி வைத்துள்ளோம். அப்பணத்தினையும் புனரமைப்பு பணிகளுக்கான செலவு நிதியில் சேர்த்துக் கொள்வதோடு, வீதியின் புனரமைப்பு பணிகளை துரித கதியில் முன்னெடுக்குமாறு மீண்டும் கோரிக்கை முன்வைக்கின்றோம்" என தங்களது கோரிக்கைகள் அடங்கிய கடிதமொன்றினை மாகாண ஆளுநருக்கு அனுப்பி வைத்துள்ளனர். மேலும், குறித்த கோரிக்கைகள் அடங்கிய கடிதம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஸ் குணவர்த்தன, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர், சாவகச்சேரி பிரதேச செயலர், கொடிகாமம் பிரதேசசபை செயலாளர் உள்ளிட்டோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது

# மயிலத்தமடு பண்ணையாளர்களுக்கு ஆதரவாக யாழில் போராட்டம்!



மட்டக்களப்பு பண்ணையாளர்களுக்கு நீதி கோரி யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. குறித்த போராட்டம் தமிழர் ஒருங்கிணைந்த கட் டமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் நல்லை திருஞான சம்பந்தர ஆதீனத்திற்கு முன்பாக முன்னெடுக்கப் பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களான த. சித்தார்த்தன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள், சைவமகா சபையினர், மத தலைவர்கள், பொது மக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

மயிலத்தமடு, மாதவனை பண்ணையாளர்களால் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்தில் மாபெரும் கவயீர்ப்பு போராட்டம் இடம்பெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# துமிந்த விவகாரம்: உயர்நீதிமன்றத்தின்

## தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. ஹிருணிகா

என் தந்தை விவகாரத்தில் உயர்நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

2011 ஆம் ஆண்டு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் துமிந்த சில்வாவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் தீர்மானம் தன்னிச்சையானது என்று உயர்நீதிமன்றம் கடந்த புதன்கிழமை அறிவித் துள்ளது.

அத்துடன், குறித்த தீர்மானம் சட்டத்துக்குப் புறம்பானது என்றும் தீர்ப்பளித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஹிருணிகா பிரேமச்சந்திர கருத்துரைக்கும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இது தனிமனித வெற்றியல்ல, முழு நாட்டின் வெற்றி, உண்மை ஒரு நாள் நிச்சயம் வெல்லும். கோட்டாபயவின் தவறான



தீர்மானத்தை உயர்நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுமன்னிப்பு அதிகாரத்தை எதிர்கால ஜனாதிபதிகள் துஷ்பிரயோகப்படுத்தக் கூடாது என்பதற்கு உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சிறந்த எடுத்துக்காட்டாகும்" என அவர் தெரிவித்துள்ளார்.

விளம்பர தொடர்புகளுக்கு
021 221 7557
Mobile :
+94 777 163990







# கிட்டு என்றொரு பெருந்தளபதி!

தீருவில் கடலென மக்கள், இந்திய அரசு தமிழீழத்தின் இதயத்தில் அடித்து வருத்திய பழைய நினைவைச் சொல்லிக் கொண்டு நிற்கும் பன்னிருவரின் நினைவுக் கோயிலைச் சுற்றியும் நிரவியும் மக்கள். நெஞ்சங்களில் கோபம், அழுகை. கண்ணீர், சோகத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் எழுந்த சினம், அன்புக்குரியவனை இழந்து விட்ட தவிப்பு. இதயத்தில் விழுந்துவிட்ட இரண்டாவது அடி. அதே தீருவில். கிட்டண்ணையும் அவர் தோழர்களும் கப்பலில்... படமாக நம்ப முடியாத நிஜம்.

படத்திலும் கிட்டண்ணையின் முகத்தில் கனிவான பார்வை.தன் தலைவனை வரவேற்கும் மகிழ்ச்சியான சிரிப்பு.அம்மா தன் இளைய மகனின் இழப்பைத் தாங்கமுடியாமல் மூத்த மகனைக் கட்டியணைத்து அழுதாள். அவளுக்குத் தலைவரும் மகன் தான்.

தேசம் அழுதது.மக்கள் கூட்டம் தங்கள் நெஞ்சத்தில் வாழ்ந்தவனுக்கு அஞ்சலி செலுத்த வந்த தலைவனைப் பார்த்து கையசைத்தது. உறுதியான அசைவு, கண்ணீர் அலைகளினூடே பிறந்த நம்பிக்கை. தலைவன் இருக்கின்றான் கிட்டண்ணை அடிக்கடி சொன்ன வார்த்தைகள் அவை.

ஐந்து வருடங்களுக்கு முன்பு,சுதுமலை அம்மன் கோவில் முன்றிலில் இலட்சக் கணக்கான மக்கள் திரண்டிருந்தார்கள். முகங்களில் தலைவனைக் கண்ட மகிழ்ச்சி. தலைவன் சொல்லப் போகும் வார்த்தைகளுக்காக ஏங்கி நிற்கும் நிமிடங்கள்.

**அடுத்ததாக, தளபதி அவர்கள் பேசுவார்! மக்களின் ஆரவாரம், ஆர்ப்பரிப்பு.**

அவர்களின் தலைவனின் முன்பு, அவர்களின் தளபதி. மகிழ்ச்சிப் பிரவாகம், தங்கள் தளபதியில் தாங்கள் வைத்திருக்கும் அன்பைத் தலைவனுக்குக் காட்டும் துடிப்பு. உற்சாகம், அந்த ஆர்ப்பரிப்புக்குள் வார்த்தைகள் தெளிவாக விழவில்லை. ஒன்றிரண்டு மனதில் விழுந்தது அப்படியே பதிந்தது.

தலைவர் இருக்கிறார். அவரை நம்புங்கள் ஒரு தூய உள்ளத்தில் இருந்து வந்த சத்தியமான வார்த்தைகள். இன்றும் கூட அந்த வார்த்தைகளுக்குத் தான் எவ்வளவு உயிர்ப்பு இருக்கின்றது. கிட்டண்ணை. மக்களின் இதயங்களில் கூடுகட்டி வாழ்ந்த பறவை அது. அது எப்படி முடிந்தது? அதொன்றும் அதிசயமானதல்ல. தங்களுக்காகச் சாவுக்கு முன்னால் நிற்கும் வீரன் ஒருவனை நேசிக்க எவருக்குமே காரணங்கள் தேவையில்லை. கிட்டண்ணை சிறந்த ஒரு போராளி. வீரன். அவரின் துணிவு, வீரம், விவேகம், வேகமான செயல்... எல்லாவற்றையுமே மக்கள் இரசித்தனர் விரும்பினர். தாய்நாடு தன் குழந்தையில் வைத்த பாசம் அது. மக்கள் பயந்து நடுங்கி உறக்கமற்று விழித்த காலம் வீதிக்கு வீதி செத்தழிந்த காலம் எல்லாம் மாறிப்போனது கிட்டண்ணையின் காலத்தில் தான்.

"கோட்டையில் இருந்து ஆமி வெளிக்கிடுறானாம்" மறுகணம்,அவசரமாக மேற்சட்டையைக் கூட ஒழுங்காக அணியாமல் கிட்டண்ணை அங்கு நிற்பார்.கிட்டர் நிற்கிறார் இனிப்பயமில்லை. மக்களின் மனங்களில் துணிவு பிறக்கும். இராணுவத்தினர் திரும்பி ஓடியதும் ஊர் முழுவதும் வெற்றிக்களிப்பு: மகிழ்ச்சிக் கொண்டாட்டம். அது அவர்களின் பிள்ளை கள் பெற்ற வெற்றி.

பலாலி, நாவற்குழி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, ஆனையிறவு என்று எங்கு இராணுவத்தினர் புறப்பட்டாலும் அங்கு கிட்டண்ணை நிற்பார்.

கிட்டர் நிற்கிறார் இனிப்பயமில்லை. "மக்களின் மனங்களில் துணிவு பிறக்கும். இராணுவத்தினர் திரும்பி ஓடியதும் ஊர் முழுவதும் வெற்றிக் களிப்பு: மகிழ்ச்சிக் கொண்டாட்டம். அது அவர்களின் பிள்ளைகள் பெற்ற வெற்றி. பலாலி, நாவற்குழி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, ஆனையிறவு என்று எங்கு இராணுவத்தினர் புறப்பட்டாலும் அங்கு கிட்டண்ணை நின்றார். இரவிலும் பகலிலும் ஒவ்வொரு நாளும் சண்டை.

அந்தக் காலங்களில் தான் கிட்டண்ணை மக்களின் மனங்களில் வாழத் தொடங்கினார். அது நிரந்தரமான அழிவற்ற வாழ்வு: கோபித்தாலும் சண்டையிட்டாலும் சாகாத வாழ்வு. வீதிகளின் ஓரங்களில், வயது முதிர்ந்த கிழவர்களுக்கு அருகில் விரித்து வைத்திருக்கும் வெற்றிலைச் சரையிலிருந்து பாக்குச் சீவலை எடுத்துக் கடித்தபடி, கிட்டண்ணை நாட்டு நடப்புகளைப் பேசிக் கொண்டிருப்பார். சில மாலை நேரங்களில் இது நடக்கும். கிழவர்களுக்கோ தாராளமாக நேரமிருந்தது. கிட்டண்ணைக்கோ அப்படியில்லை. ஆனாலும் அந்த மாலை நேரங்களை அவர் விரும்பினார். அந்த முதியவர்களின்

தீருவில் கடலென மக்கள், இந்திய அரசு தமிழீழத்தின் இதயத்தில் அடித்து வருத்திய பழைய நினைவைச் சொல்லிக் கொண்டு நிற்கும் பன்னிருவரின் நினைவுக் கோயிலைச் சுற்றியும் நிரவியும் மக்கள். நெஞ்சங்களில் கோபம், அழுகை. கண்ணீர், சோகத்தை ஏற்றுக் கொள்ள முடியாமல் எழுந்த சினம், அன்புக்குரியவனை இழந்து விட்ட தவிப்பு. இதயத்தில் விழுந்துவிட்ட இரண்டாவது அடி. அதே தீருவில். கிட்டண்ணையும் அவர் தோழர்களும் கப்பலில்... படமாக நம்ப முடியாத நிஜம்.

படத்திலும் கிட்டண்ணையின் முகத்தில் கனிவான பார்வை.தன் தலைவனை வரவேற்கும் மகிழ்ச்சியான சிரிப்பு.அம்மா தன் இளைய மகனின் இழப்பைத் தாங்கமுடியாமல் மூத்த மகனைக் கட்டியணைத்து அழுதாள். அவளுக்குத் தலைவரும் மகன் தான்.

தேசம் அழுதது.மக்கள் கூட்டம் தங்கள் நெஞ்சத்தில் வாழ்ந்தவனுக்கு அஞ்சலி செலுத்த வந்த தலைவனைப் பார்த்து கையசைத்தது. உறுதியான அசைவு, கண்ணீர் அலைகளினூடே பிறந்த நம்பிக்கை. தலைவன் இருக்கின்றான் கிட்டண்ணை அடிக்கடி சொன்ன வார்த்தைகள் அவை.

ஐந்து வருடங்களுக்கு முன்பு,சுதுமலை அம்மன் கோவில் முன்றிலில் இலட்சக் கணக்கான மக்கள் திரண்டிருந்தார்கள். முகங்களில் தலைவனைக் கண்ட மகிழ்ச்சி. தலைவன் சொல்லப் போகும் வார்த்தைகளுக்காக ஏங்கி நிற்கும் நிமிடங்கள்.

**அடுத்ததாக, தளபதி அவர்கள் பேசுவார்! மக்களின் ஆரவாரம், ஆர்ப்பரிப்பு.**

அவர்களின் தலைவனின் முன்பு, அவர்களின் தளபதி. மகிழ்ச்சிப் பிரவாகம், தங்கள் தளபதியில் தாங்கள் வைத்திருக்கும் அன்பைத் தலைவனுக்குக் காட்டும் துடிப்பு. உற்சாகம், அந்த ஆர்ப்பரிப்புக்குள் வார்த்தைகள் தெளிவாக விழவில்லை. ஒன்றிரண்டு மனதில் விழுந்தது அப்படியே பதிந்தது.

தலைவர் இருக்கிறார். அவரை நம்புங்கள் ஒரு தூய உள்ளத்தில் இருந்து வந்த சத்தியமான வார்த்தைகள். இன்றும் கூட அந்த வார்த்தைகளுக்குத் தான் எவ்வளவு உயிர்ப்பு இருக்கின்றது. கிட்டண்ணை. மக்களின் இதயங்களில் கூடுகட்டி வாழ்ந்த பறவை அது. அது எப்படி முடிந்தது? அதொன்றும் அதிசயமானதல்ல. தங்களுக்காகச் சாவுக்கு முன்னால் நிற்கும் வீரன் ஒருவனை நேசிக்க எவருக்குமே காரணங்கள் தேவையில்லை. கிட்டண்ணை சிறந்த ஒரு போராளி. வீரன். அவரின் துணிவு, வீரம், விவேகம், வேகமான செயல்... எல்லாவற்றையுமே மக்கள் இரசித்தனர் விரும்பினர். தாய்நாடு தன் குழந்தையில் வைத்த பாசம் அது. மக்கள் பயந்து நடுங்கி உறக்கமற்று விழித்த காலம் வீதிக்கு வீதி செத்தழிந்த காலம் எல்லாம் மாறிப்போனது கிட்டண்ணையின் காலத்தில் தான்.

"கோட்டையில் இருந்து ஆமி வெளிக்கிடுறானாம்" மறுகணம்,அவசரமாக மேற்சட்டையைக் கூட ஒழுங்காக அணியாமல் கிட்டண்ணை அங்கு நிற்பார்.கிட்டர் நிற்கிறார் இனிப்பயமில்லை. மக்களின் மனங்களில் துணிவு பிறக்கும். இராணுவத்தினர் திரும்பி ஓடியதும் ஊர் முழுவதும் வெற்றிக்களிப்பு: மகிழ்ச்சிக் கொண்டாட்டம். அது அவர்களின் பிள்ளை கள் பெற்ற வெற்றி.

பலாலி, நாவற்குழி, வல்வெட்டித்துறை, பருத்தித்துறை, ஆனையிறவு என்று எங்கு





# கிட்டு என்றொரு பெருந்தளபதி!

நிலையோ சொல்லத் தேவையில்லை. அவர்கள் பெரிதும் மதித்த வீரன் அவர்களுக்கு முன்னால்... உண்மையில் அந்த நேரங்களில் அவர்கள் மிகவும் பெருமைப்பட்டார்கள் வீட்டு முற்றங்களில், பின் கோடிகளில், வெற்றுடம்பில் இழுத்து முடியப்பட்ட காற்சட்டைகளுடன் "சிறிய கிட்டுகள்" நிற்பார்கள். இடுப்பில் கிட்டண்ணையின் "357 மக்னம்" சுழற்துப்பாக்கியைப் போன்று இழு பட்டபடி வளைந்த தடி ஒன்று தொங்கும். கள்ளன் பொலிஸ் விளையாட்டெல்லாம் மறைந்து புலிகள் இராணுவ விளையாட்டுத் தொடங்கியிருந்தது.

விளையாட்டிலும் "சின்னக் கிட்டுகள்" ஒரு நாளும் தோற்பதில்லை. வெற்றி என்றும் வெற்றிதான். விளையாட்டில் கூடக் கிட்டு மாமா தோற்பதை அவர்கள் விரும்புவதில்லை. இப்படித்தான் கிட்டண்ணை எல்லாரின் நெஞ்சங்களிலும் வாழ்ந்தார். அதனால்தான் அவருக்கு ஆபத்து என்ற போது மக்கள் துடித்தனர்.

அது 1987 இன் ஆரம்பம். வடமராட்சியில் இராணுவத்தினருடன் நடந்த சண்டையொன்றில் கிட்டண்ணையின் கையில் பட்டிருந்த காயம் குணமாகிச் சில நாள்கள் சென்றிருந்தன.
அப்போதுதான் தேச விரோதிகளால் கிட்டண்ணைக்குக் குண்டெறியப்பட்டது. குண்டு வெடித்தது தெரியும். ஆனால், கிட்டண்ணைக்கு என்ன நடந்தது என்பது மக்களுக்குச் சரியாகத் தெரியாது, தமிழீழம் எங்கும் அதிர்ச்சி பரவியது. மக்கள் சிரிப்பை மறந்து சோகத்தில் ஆழ்ந்து போனார்கள். தமிழ் நிலம் எங்கும் கவலையில் தவித்தது.

உயிருக்கு ஆபத்தில்லையாம் என்ற பொழுது ஓரளவு ஆறுதலாக இருந்தது. ஆனாலும், கவலை முற்றாகத் தீரவில்லை. ஏனெனில் கிட்டண்ணை ஒரு காலை இழந்திருந்தார். 1987 மே நாள். மக்கள் பெருமளவில் திரண்டிருந்தனர்.
கிட்டண்ணை பேசுவதற்கு வருகிறாராம்" மக்கள் முகங்களில் மகிழ்ச்சி கிட்டண்ணையைப் பார்த்துவிடவேண்டும் என்ற ஆவல். கிட்டண்ணை பேசினார். தரமான தொரு பேச்சாளனுக்குரிய பேச்சு. அது மக்களின் பங்களிப்புக்குரிய பாராட்டு. ஒன்றிணைந்த மக்களை வாழ்த்திய பேச்சு. அன்று மக்களிடையே உற்சாகமும் மகிழ்ச்சியும் கண்ணீரும் கரைபுரண்டு ஓடியது.

கிட்டண்ணையின் வீரத்தைப் போலத்தான் கோபமும் பிரசித்தமானது. ஒரு தாயின் கோபத்தைப் போல இரசித்து ஏற்றுக் கொள்ளும் கோபம். மறுகணம் எங்கென்று தெரியாது மறைந்துவிடும் கோபம். தோழர்களுக்கு அடியும் விழும். ஆனாலும், ஒருவரும் கோபிப்பதில்லை. கிட்டண்ணையில் உயிரையே வைத்திருக்கும் தன்மையைக் குறைப்பதுமில்லை. ஏனெனில் அவரின் கோபத்தினுள் இருக்கும் கனிவான இதயத்தை அவர்கள் அறிவார்கள்.

சண்டைகளின் பொழுது யாராவது ஒரு தோழன் காயமடைய நேரிட்டால் அந்த மனிதர் துடிக்கும் துடிப்பையும், யாராவது தோழனை இழந்துவிட்டால் முகம் கறுத்துத் தவித்து அழும் அழுகையையும் அவர்கள் கண்டவர்கள். அதனால் தான் கிட்டண்ணையில் யாரும் கோபிப்பதில்லை. அவரின் கோபம் தேவையானதே. இயக்கத்தின் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் பேணுவதற்கு அவசியமானது. கோபத்தைவிட அவரின் உள்ளே இருந்த கனிவும் திறமையும் மனிதர்களை வென்றன.
குறிபார்த்துச் சுடுவதில் கிட்டண்ணை வல்லவர். இலக்கு பொதுவாகத்தவறுவதில்லை. அது அவருடைய எதிரிகளுக்குக் கூடத் தெரிந்த விடயம். எங்களூர்ப் பெரியவர்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் பெருமை. ஆபத்தான வேளைகளில்கூட பதற்றமற்று, நிதானமாகத் துப்பாக்கியைக் கையாள்வார். சண்டைகளின் போது தேவையற்ற துப்பாக்கி இயக்கத்தை அவர் ஒருபோதும் செய்ததில்லை. இதெல்லாவற்றுக்கும் அவருடைய முதலாவது தாக்குதலே சான்றாக நிற்கின்றது.

**1983. உமையாள்புரம்.**

நிலக்கண்ணிகளைப் பொருத்தி விட்டு இராணுவத்தினரின் வருகைக்காக அவர்கள் பத்துப்பேர் காத்திருந்தார்கள். எல்லாம் சரி. இராணுவ வண்டிகள் வருவது தெரிந்தது. கண்ணிவெடிகளைக் கையாளும் தொழில்நுட்ப அறிவைப் பெறாத காலம், இராணுவ வண்டிகளைப் பார்த்து மிரண்டு ஓடி வந்த ஆட்டுக் குட்டியின் பாய்ச்சலுக்குக் கண்ணிவெடிகள் வெடித்தன. புலிகள் வெவ்வேறு திசை களால் பின்வாங்கினார்கள், அல்லது தப்பி ஓடினார்கள்.

வீதிக்கு அருகாகத் தண்டவாளம் இருந்தது. அதன் இரு பக்கமும் வெட்டை கவச வாகனங்கள் இரண்டு துப்பாக்கிரவைகளை அள்ளி வீசிக் கொண்டு நெருங்கி வந்தன. ஒருசிலர் விழலாம் என்ற நிலை. கிட்டண்ணை தண்டவாளத்தில் நின்று திரும்பி தனது "ஜி3"துப்பாக்கியால் கவசவாகனத்தை நோக்கிச் சுட்டார். தவறாத குறி. கவசவாகனத்தின் சாரதி காயப்பட்டான். அவ் வாகனம் துரத்தி வந்த வேகத்துக்குச் சரிந்து புரண்டது. அவரது முதலாவது களமும் சாதனை தான்.

அதன் பின்பு, கிட்டண்ணை கண்ட ஒவ்வொருகளமும் அவரது வீரத்தை வெளிப்படுத்தி நின்றது பகைவர்களைக் கலங்கடித்தது. கிட்டண்ணை சிறந்ததொரு வீரன். அதைப் போன்றுதான், கமராவைத் தூக்கினால் சிறந்ததொரு படப்பிடிப்பாளன். அது தொலைக்காட்சிக் கமராவாக இருந்தாலும் சரி...
சிறந்ததொரு இலக்கியவாதி எழுத்தாளன். போராளிகள் தொடர்பாக போர்முனையில் அவர்களின் வாழ்க்கை தொடர்பாக உள்ளத்தைத் தொட்டுவிடும் உணர்வோடு அவரின் எழுத்துகள் வெளிப்படும்.

எம்படகு துரத்தப்படுவதை
அறிந்து, எம் வீரர்கள் படகு தப்பி வரும் என்று பார்த்துக் கொண்டிருக்க. எம்படகு எம் கண் முன்பே வெடித்துத் தீப்பற்றி எரிவதைக் கண்டோம். "ஆனால்.செல்லமுடியாது. ஏன்! அது தரையில்லை கடல்." முன்பு சிறிலங்கா கடற்படையால் எமது தோழர் பல வருடங்களுக்கு வந்த படகு மூழ்கடிக்கப்பட்டபொழுது. "திரை கடல் ஓடினோம் திரவியம் தேடி அல்ல என்ற தலைப்பில். கிட்டண்ணை இப்படித் தான் எழுதினார்.

**ஆனால் இன்று. 1993 ஜனவரி 16**

நீண்டதொலைவில், இந்திய வல்லாதிக் கப்பிடிக்குள் கிட்டண்ணை...நாங்கள் செல்ல முடியாது. ஏன்? கடலில், புலிகளின் கப்பலைச் சுற்றி இந்தியப் போர்க் கப்பல்கள். சரணடைய வேண்டும் அல்லது அந்தப் பெரும் போர்க் கப்பல்கள்." சமாதான நோக்கத்தோடு ஆயுதங்களற்று வந்த புலிகளின் கப்பலை மூழ்கடிக்கும். பின்பு, தங்கள் கடல் எல்லைக்குள் நுழைந்து தமது போர்க் கப்பலைத் தாக்க வந்த புலிகளின் கப்பலை மூழ்கடித்ததாகக் கதையினை உருவாக்கும். இந்திய அதிகாரிகளும் செய்தி நிறுவனங்களும் பொய் சொல்வதில் வல்லவர்கள். புலிகளின் மீது இலகுவாகப் பழி சுமத்தப்படும். "சரணடையப் போவதில்லை. " சாவு நிச்சயமாகிப்போனது. ஆனால். அந்தச் சாவு எதிரிகள் தலைகுனியும் சாவாக இருக்க வேண்டும் சரித்திரம் படைக்க வேண்டும் தாய் நிலத்தைத் தலை நிமிரச் செய்ய வேண்டும்.


சண்டைக்களங்களில் எல்லாம் கிட்டண்ணையைக் காப்பாற்ற நூற்றுக்கணக்கான தோழர்கள் நின்றார்கள். ஆனால், இன்று குட்டி சிறி அருகில் நின்றான். அவன் சின்ன வயதில் இயக்கத்தினுள் வந்தவன். அதனால்தான் அவனுக்கு அந்தப் பெயர். அவன் பெரியாளாக வளர்ந்த பின்பும் அந்தப் பெயர் மாறவே இல்லை.அவன் அழுதிருப்பான் தனக்காக அல்ல, கிட்டண்ணைக்காக. அவரில் அவன் உயிரையே வைத்திருந்தான். தன் சாவுக்காக அந்த உறுதி மிக்கவன் ஒருபோதும் கலங்கியவனில்லை. இப்போது கலங்கி இருப்பான். மற்றத் தோழர்களும் கிட்டண்ணையைக் காப்பாற்ற முடியாமல் போகிறதே எனத் தவித்திருப்பார்கள். ஆனால் பிரச்சினை எல்லோரின் கைகளுக்கும் மேலே சென்றிருந்தது.

இந்திய வல்லாதிக்கப்பேய்கள் இறங்கி வரப்போவதில்லை. எங்கள் தொலைத் தொடர்புக்கருவி கப்பலிலிருந்து வரும் செய்திக் காகக் காத்திருந்தது. தேசம் துடித்தது. தலைவர் தவித்துக் கொண்டிருந்தார். அவர் வளர்த்தெடுத்த தளபதி கடினமான காலங்கள் எல்லாம் தோளோடு தோள் கொடுத்துழைத்த தோழன் சாவின் விளிம்பில் முடிவு உறுதியாகியது.
விடைபெற்றிருப்பார்கள் தேசத்திடமிருந்து, தோழர்களிடமிருந்து தலைவனிடமிருந்து. கடற்கரைக் கிராமத்து வீடொன்றில் கப்பலுடன் தொடர்பில் இருந்த தொலைத்தொடர்புக்கருவி நீண்ட நேரம் காத்திருந்தது. ஏதாவது செய்தி வராதா வருகிறதா கிட்டண்ணையை இழந்து விட்டோம்
கடல் ஆர்ப்பரித்தது. அலைகள் எழுந்து இதயத்தில் அடித்தன. தேசத்தின் நெஞ்சு துடித்தது தவித்தது கதறி அழுதது ஒரு கணம் தயங்கி நின்றது.

**தாங்க முடியாத இழப்பு.**

எங்கள் போராட்டப் படகு இப்படித்தான். தாங்கமுடியாத இழப்புகள் வரும்போது ஒரு கணம் தயங்கி நிற்கும். பின் தலைவன் இருக்கிறான் எனத் தொடர்ந்து செல்லும். அது கிட்டண்ணை சொல்லித்தந்த பாடம்.

# வேட்பாளரை அறிவித்தது நாம் தமிழர்!



நாம் தமிழர் கட்சியின் பொதுக்குழு கூட்டம் கடந்தவாரம் நடைபெற்றது. அந்தக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பாராளுமன்ற தேர்தல் தொடர்பாக விரிவாக விவாதிக் கப்பட்டது. இதனைய டுத்து, தென் சென்னை பாராளுமன்ற தொகுதி வேட்பாளராக பேராசிரியர் தமிழ்ச் செல்வி அறிவிக்கப்பட் டுள்ளார். விரைவில் 39 தொகுதி வேட்பாளர்களும் அறிவிக்கப்படுவார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. கூட்டத்தில் சீமான் பேசுகையில், மாவட்ட நிர்வாகிகள் நியமனத்தில் சிலர் புரிந்துகொள்ளவில்லை. முதல்கட்ட தலைவர்களே இல்லாதபோது இரண்டாம் கட்ட தலைவர் என்பதா? தலைவருக்கு என்ன தகுதி உள்ளது. கட்சி தொடங்குவது எளிது தொடர்வது என்பது கடினமானது - என்றார்.

# தாய்வான் ஜனாதிபதித் தேர்தல் அமெரிக்க ஆதரவாளர் வெற்றி!

## சீனா மிரட்டல்!




தாய்வானில் நேற்றுமுன்றி னம் நடந்த ஜனாதிபதி தேர்தலி அமெரிக்க ஆதரவு கட்சியான ஜனநாயக முன்னேற்ற கட்சியின் வாய் சிங்டி வெற்றி பெற்றும்

இந்தத் தேர்தலில் ஆளும் ஜனநாயக முற்போக்கு கட்சி சார்பில் தற்போதைய உப ஜனா திபதிலாய் சிங் டி. பிரதான எதிர்க் கட்சியான குவோமின் டாங் சார்பில் ஹவ் யூ. தாய் வாள்மக்கள் கட்சி சார்பில் கோ வென்ஜி ஆகியோர் போட்டியிட்டனர்.

2.5 கோடி மக்கள் தொகையில் 1.9 கோடி பேர் வாக்குரிமை பெற்றிருந்தனர். வாக்குப் பதிவில் 70சதவீதத்தினர் வாக்களித்தனர்.

யாக்கு எண்ணிக்கை தொடங் கியது முதல் ஆளும் ஜனநாயக முற்போக்கு கட்சியின் வேட்பா னர் லாய் சிங் டி முன்னிலையில்

இருந்தார். இறுதிசுற்று வாக்கு எண்ணிக்கை யில் அவர் 53.74 இலட்சத்துக்கும் அதிகமாக வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார். குவோமின்டாங் கட்சி வேட்பாளர் ஹல் பூ-க்கு 44.59 இலட்சம் வாக்குகள் கிடைத்தன.

ஜனாதிபதி தேர்தலில் லாய் சிங் டி வெற்றி பெற்றதும் சீன பாதுகாப்புத் துறை அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில், ”தாய்வான் விவகாரத்தில் சீன மக்கள் விடுதலை படை எதற்கும் தயார் நிலையில் இருக்கி றது.தாய்வானை சுதந்திர நாடாக அறிவிக்க முயன்றால், அந்த முயற்சியை நசுக்குவோம்”

என்று எச்சரித்துள்ளது. இதேவேளை, சீனாவில் கடந்த 1911ஆம் ஆண்டில் மன் ஊராட்சி ஒழிக்கப்பட்டு, சீன தேசிய கட்சி ஆட்சியை கைப்பற்றியது. கடந்த 1927ஆம் ஆண்டில் சீன தேசிய கட்சிக்கு எதிராக, சீன கம்யூனிஸ்ட் கட்சி போர்க் கொடி உயர்த்தி யது. இதன் காரணமாக 1949-ஆம் ஆண்டு வரை சீனாவில் உள் நாட்டுப் போர் நீடித்தது. இந்தப் போரில் தோல்வியை தழுவிய சீன தேசிய கட்சியினர், தென் சீன கடலில் 168 தீவுகள் அடங்கிய தாய்வானில் குடியேறி ஆட்சி நடத்தினர். அந்தப் பகுதியை சீனா சொந்தம் கொண் டாடி வருகிறது.

சர்வதேச அரங்கில் தற்போது 14 நாடுகள் மட்டுமே தாய்வானை தனி நாடாக அங்கீ கரித்துள்ளன. தாய்வானுக்கு அமெரிக்கா பெருமளவு ஆயுத உதவிகளை வழங்கி வருகிறது என்பது குறிப்பிடதக்கது

## அன்பான வாசகர்களுக்கு..!

தேசியம் வாசகர்களுக்கு வணக்கம்.
எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம்.
கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.
அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம். பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

**அனுப்ப வேண்டிய முகவரி :**

E-mail : thesiyamnews@gmail.com | Whatsapp : +94 76 567 3339

# தமிழர் வீரத்தை பறைசாற்றும் வகையில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவும் அரங்கம்



தமிழர்களின் பாரம்பரிய வீர விளை யாட்டான ஜல்லிக்கட்டு போட்டியை நினைவு கூரும் வகையில் மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே கீழக்கரை கிராமத்தில் பிரமாண்டமாக ஜல்லிக்கட்டு மைதானம் கட்டப்பட்டுள்ளது. ஜல்லிக்கட்டு போட்டிக்கு புகழ்பெற்ற இடமாக மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் திகழ் கிறது. இங்கு திரளும் பார்வையாளர் களுக்கு அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு போட்டியிடம் போதுமானதாக இல்லை. இதனால், தமிழ்நாடு அரசு 66 ஏக்கர் பரப்பளவில் 44.6 கோடி (இந்திய) ரூபாய் மதிப்பில் “கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம்“ என்ற பெயரில் அரங்கத்தை அமைத்தது. பழமை மாறாமல் மன்னர் காலத்து அரண்மனை போல் இந்த ஏறு தழுவுதல் அரங்க முகப்பு அமைக்கப்பட்டுள்ளது.இந்த ஜல்லிக்கட்டு அரங்கில் தேவையான அனைத்து வசதிகளும் செய்யப் பட்டுள்ளது. கால் நடை மருத்துவமனை, காத்திருப்பு கூடம், சுகாதார நிலையம், வாடி வாசல், அலுவலகம், தற்காலிக விற்பனை கூடம், பொருட்கள் பாதுகாப்பு அறை, மழைநீர் வடிகால் வசதி, குடிநீர் வசதி, 50 ஆயிரம் லீற்றர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த் தேக்க தண்ணீர் தொட்டி, மருந்தகம், கால்நடை மருத்துவ வசதி, கழிப்பறை, பத்திரிகையாளர் அறை, அலுவலர்கள் ஓய்வு அறை, என அனைத்து வசதிகளும் இங்கு உள்ளன.இந்த பிரம் மாண்ட ஜல்லிக் கட்டு அரங்கில் சுமார் 10, ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் - அமர்ந்து விளையாட்டை கண்டுரசிக்கும் வகையில் பிரம்மாண் டமான முறையில் சுமார் 20 அடி உயரத்திற்கு மேல் அமர்ந்து பார்க்கும் வகையில் கண்கவர் வேலைப்பாடுகளுடன் அரங்கம்அமைக்கப்பட்டுள்ளது.பறைசாற்று ம் வகையிலே இந்த மைதானத்தை தமிழக முதல்வர் இந்த மாத இறுதியில் திறந்து வைக்கிறார். திறப்பு விழா நாளில் உலகத் தரத்தில் மிக பிரமாண்டமாக இந்த அரங்கில் ஜல்லிக்கட்டு நடத்தவும் ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

# இஸ்ரேல் - ஹமாஸ் போர் 100 நாட்களை எட்டியது!



இஸ்ரேல் - ஹமாஸ் போர் 100ஆவது நாளை எட்டியது. போர் விரிவடைந்து வரும் நிலையில், போரில் பலியானவர் களின் எண்ணிக்கை உள்பட அதிர்ச்சிய ளிக்கும் எண்களை வெளியிட்டுள்ளது அசோசியேடட் பிரஸ்.

பலஸ்தீன சுகாதார அமைச்சகம் மற்றும் சர்வதேச அமைப்புகளின் தகவலின் அடிப் டையில் தொகுக்கப்பட்ட விபரங்கள் இவை.

இறப்புகள் காஸாவில் பலஸ்தீனர்கள் பலி எண்ணிக்கை 23 ஆயிரத்து 843ஆக உள்ளது. இதேநேரம், ஒக்ரோபர் 7 ஆம் திகதி நடந்த தாக்குதலில் 139

இஸ்ரேலியர்கள் உயிரிழந்தனர். மேற்கு கரையில் உயிரிழந்த பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 347, காஸாவில் பலியான பத்திரிகையாளர்கள் 82, பலியான ஐ. நா உறுப்பினர்களின் எண்ணிக்கை 148. சுகாதார பணியா ளர்கள் 337 ஆக உள்ளது.

இதேபோன்று, ஒக்ரோபர் 7ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் 314 இஸ்ரேல் படையினர் உயிரிழந்தனர். காஸாவில் நடக்கும் போரில் 187 இஸ்ரேல் படைகள் உயிரிழந்தனர். இதேநேரம், இஸ்ரேல் நடத்தும் போரில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஹமாஸ் போராளிகள் உயிரிழந்தனர்.

இதேநேரம், காஸாவில் 45 -56 வீதமான கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன. இதில், 69 வீதத்துக்கு மேற்பட்ட கட்ட டங்கள் பாடசாலை களாகும்.


காஸாவின் மொத்த சனத் தொகையில் 26 வீதத்தினர் - 5 இலட்சத்து 76 ஆயிரத்து 600 பலஸ்தீனர்கள் பட்டினியால் வாடுகின்றனர். 6 இலட்சத்துக்கும் மேற்பட்ட சிறார்கள் -100 வீதத்தினரும் பாடசாலைக்கு செல்ல வில்லை.

காஸாவில் இருந்து 85 வீத மான பலஸ் தீனர்கள் - 18 இலட்சம் பேர் இடம்பெ யர்ந்துள்ளனர். இஸ்ரேலில் 2.6 வீதத்தினர் - 2 இலட்சத்து 49 ஆயிரத்து 263 பேர் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஒக்ரோபர் 7ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலில் இஸ்ரேலியர்கள் மற்றும் வெளிநாட்டவர்கள் என 250 இற்கும் மேற்பட்டவர்கள் பணயக்கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர். இதில், 121 பேர் விடுதலைசெய்யப்பட்டனர். இவர்களில் 33 பேர் உயிரிழந்தனர்.

இதேநேரம், இஸ்ரேலி 240 பலஸ்தீனர் களை விடுதலை செய்துள்ளது. எனினும், இஸ்ரேலின் சிறைகளில் உள்ள பலஸ்தீனர் கள் விபரம் தெரியவில்லை. தவிர, இஸ்ரேல் மீது இதுவரை 14 ஆயிரம் ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தைப்பொங்கலும், மாட்டு வண்டிச் சவாரியும்: ஈழத் தமிழரின் பாரம்பரிய வீர விளையாட்டு!



ஐங்கரன் விக்கினேஸ்வரா

**ஆதிகாலத்தில் உழவுத் தொழிலே தமிழர்களின் முதன்மைத் தொழிலாக இருந்து வந்துள்ளது. தமிழர்கள் விவசாயிகளாக இருந்ததால் இயற்கை சார்ந்த பூமித்தாய்க்கும், சூரியனுக்கும், மற்றும் தங்கள் விவசாயத்திற்கு உதவியாக இருந்த மாடுகளுக்கும் நன்றி சொல்லும் நாளாகத்தைப்பொங்கலைத் தொன்றுதொட்டுக் கொண்டாடி வருகின்றனர்.**

### தைப்பொங்கலும் மாட்டு வண்டிச் சவாரியும்:

தைப்பொங்கல் தமிழர் திருநாளாகும். உழவர் திருநாள் என்றும் இதை அழைப்பர். 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்று சொல்வதற்கமைய தையே தமிழரின் புத்தாண்டு என்றும் கூறிடுவர்.

தைப்பொங்கலுக்கு மறுநாள் மாட்டுப் பொங்கல், அல்லது பட்டிப் பொங்கல் என்று சொல்லி, உழவர்களுக்குத் துணையாக இருந்த மாடுகளுக்குப் பொங்கிப்படைப்பது தமிழர் வழமை.

புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை போன்ற சங்க இலக்கியங்களில் 'தைத்திங்கள்' பற்றிக் குறிப்புகள் இருக்கின்றன. 'தைத்திங்கள் தண்கயம் படியும் தைத்திங்கள் தண்ணிய தரினும்' போன்ற பாடல்களைக் குறிப்பிடலாம்.

சங்க இலக்கியங்களான சிலப்பதிகாரத்தில் இந்திரவிழாவான பொங்கல் பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன. 'வரப்புயர நீருயரும், நீருயர நெல்லுயரும்..' என்று உழவுத் தொழில் பற்றி ஔவையார் குறிப்பிடுகின்றார். 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே' என்று திருவள்ளுவர் குறிப்பிடுகின்றார்.

தைப்பொங்கல் என்றாலே தமிழ் மக்களின் வாழ்வில் விழாக்கோலம் தோன்றிடும் பண்டிகைக் காலமாக அமைந்திடும். தமிழ் மக்களின் வாழ்வில் புது விடியலாக பிறக்கும் தைப் பொங்கல் நாட்களிலேயே , தமிழரின் வீர விளையாட்டுக்களான ஜல்லிக்கட்டு

> **“ தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தையும், பழந்தமிழ் வீர விளையாட்டுக்களையும், தமிழ் பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பது தாயக மக்களின் கடமை மாத்திரமன்றி, புலம்பெயர் தமிழர்களின் பெருங்கடமையும் காலத்தின் கட்டாயமுமாகும். ”**

தமிழகத்திலும், மாட்டு வண்டிச் சவாரி ஈழத்திலும் செழிமையாக காலங்காலமாக நடாத்தப்படுகிறது.

### தமிழரின் பாரம்பரிய விளையாட்டு

தை பிறந்த பின்னரே உழவரின் வாழ்வும் சிறப்படையும். உழவர்களின் வாழ்வியல் திறமைகளை வெளிக்கொணரும் விளையாட்டே மாட்டு வண்டிச்சவாரியாகும்.

விழாக்கோலம் தோன்றிடும் பண்டிகைக் காலமாக அமைந்திடும் தைப்பொங்கல் தமிழ் மக்களின் வாழ்வில் புது விடியலாக பிறக்கும். தமிழரின் வீர விளையாட்டுக்களான ஜல்லிக்கட்டு தமிழகத்திலும், மாட்டு வண்டிச் சவாரி ஈழத்திலும் செழிமையாக காலங்காலமாக தைப் பொங்கல் நாட்களிலேயே விமர்சையாக நடாத்தப்படும்.

ஈழத்தில் தமிழர்களுக்கே உரித்தான பாரம்பரியம் மிக்க விளையாட்டுக்களில் ஒன்றாக மாட்டு வண்டிச் சவாரி விளங்குகின்றது. மாட்டு வண்டிச் சவாரி ஆரம்ப காலம் தொடக்கம் தற்காலப் பகுதி வரையில் சிறந்ததொரு வீர விளையாட்டாகவும் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவராலும் விரும்பிப் இரசிக்கப்படும் விளையாட்டாகவும் காணப்படுகின்றது.

மாட்டு வண்டிச் சவாரி தமிழர்களின் பண்பாட்டை ஒருபுறம் அடையாளங்காட்டி நிற்க, மறுபுறம் விவசாயத்தின் முதுகெலும்பான தரமான காளைகளை வளர்க்கும் கால்நடை வளர்ப்பின் முக்கிய உந்து சக்தியாகவும் அது காணப்படுகின்றது.

சவாரிக்கான மாடுகள் அவற்றின் பிறப்பிலிருந்தே தேர்ந்தெடுக்கப்பட்டு வளர்க்கப்படுகின்றன. இது ஒரு வீர விளையாட்டு என்ற காரணத்தினால் சவாரி வண்டியில் பூட்டப்படும் காளை மாடுகளும் கம்பீரமும், வீரமும் மிக்கவையாகவே தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

### யாழில் மாட்டு வண்டிச் சவாரி :

ஏறு தழுவுதல் தமிழ் நாட்டின் வீர விளையாட்டு என்றால் ஈழத் தமிழர்களின் வீர விளையாட்டாக மாட்டு வண்டிச் சவாரி அமைகிறது. யாழ்ப்பாணத்தில் மட்டுமல்லாது. முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, மட்டக்களப்பு. திருகோணமலை ஆக்கிய இடங்களிலும் மாட்டு வண்டிச் சவாரி காலம் காலமாக தொடர்வதை நாம் அவதானிக்கலாம்.

அக்காலப்பகுதிகளில் யாழ்பாணம் முழுவதும் பிரபலமான சவாரி ஓட்டுநர்களாக அளவெட்டி சிவஞானம், சவாரிக்கார வன்னித்தம்பி, பண்டத்தரிப்பு தங்கராஜா, சவாரிக்கார சபாபதி, சிதம்பரப்பிள்ளை, கரவெட்டி இளையாம்பி போன்றவர்கள் காணப்பட்டனர். மாட்டு வண்டில் சவாரியைப் பொழுதுபோக்காக மாத்திரமன்றித் தொழிலாகவும் செய்தவர்கள் பலர். அவ்வாறு மாட்டுவண்டிச் சவாரித் தொழிலில் ஈடுபடுவோரை "சவாரி" என்றே அடைமொழி வைத்து அழைப்பதும் பழக்கத்தில் இருந்துள்ளது. சவாரி வண்டிலில் ஆசனப் பலகையில் இருந்து மாடுகளை சுறுசுறுப்பாக அவர் வழி நடத்திச் செல்லுவார்.

தினகரன், ஈழநாடு நாள் ஏடுகள் நடத்திய போட்டி மாட்டுச் சவாரியைத் தேசிய விளையாட்டு நிலைக்கு உயர்த்தின என்றால், 1974 இல் நடந்த அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு இக்கலையை அனைத்து உலக நிலைக்கு உயர்த்தியது. இதுவரை காலமும் யாழ்ப்பாணத்து மக்கள் பார்த்துச் சுவைத்த இப்போட்டியை வெளிநாடுகளில் இருந்து வந்த பார்வையாளர் பார்த்துப் பாராட்டினர். கைதட்டி மகிழ்ந்தனர். தமிழ் நாட்டில் சென்னை, மதுரை ஆகிய இடங்களில் நடந்த அனைத்துலகத் தமிழ் மாநாடுகளின்போது ஜல்லிக்கட்டுக் காளை விளையாட்டு எல்லோருடைய பாராட்டையும் பெற்றது. அதே போன்ற பாராட்டு யாழ்பாணத்துச் சவாரிக்கும் கிடைத்தது.


யாழ்ப்பாணத்துக் கமக்காரர் மட்டும் சவாரியில் ஆர்வம் உடையவர்களெனக் கொள்தல் பொருந்தாது. கோப்பாய் நாகநாதன், தமிழரசுத் தந்தை சா. ஜே. வே. செல்வநாயகம், சட்டத்தரணி "ஐயக்கோன் " செல்லத்துரை போன்றவர் இக்கலையில் பெரும் ஈடுபாடுடையவர். இக்கலையை நவீனமயப் படுத்தி விதிமுறைகளை ஏற்படுத்தவேண்டும் என்பதில் கற்றவர் பலரும் ஆர்வம் காட்டி வந்தனர்.
அரசாங்க அலுவலராகக் கடமை புரிந்த "இலங்கையர்கோன்" சிவஞானசுந்தரம், 'சவாரி' செல்வரத்தினம், அரசாங்க மரக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர் சுன்னாகம் இ. இளையதம்பி போன்றோர் ஈழத்தில் மாட்டுவண்டிச் சவாரிக்கு பெரும் பணி ஆற்றியுள்ளனர்.

ஈழத்தில் மாட்டுவண்டிச் சவாரியானது ஒரு இடத்தில் நடக்கப்போகின்றது என்றால், அது அனைவருக்கும் பெரும்பாலும் ஊடகங்கள் வாயிலாகத் தெரியப்படுத்தப்படுகின்றது. ஆரம்பகாலங்களில் இந்தப்போட்டியானது நீர்வேலி சவாரித்திடல், முல்லைத்தீவு மாவட்டம் வவுனிக்குளம், முழுங்காவில், கிளிநொச்சி, மன்னார், கரவெட்டி, ஆவரங்கால் போன்ற இடங்களில் பெரும்பாலும் நடைபெறுவது வழக்கமாக இருந்தது.

எமது பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் பொறுப்பு எமது அடுத்த தலைமுறையிடம் இருப்பதால் இவ் விளையாட்டுக்களை பற்றி, முக்கியமாகப் புலம்பெயர்ந்த அடுத்த தலைமுறையினருக்கும் அறியத்தருவோம்.

தமிழர்களின் பாரம்பரிய கலாச்சாரத்தையும், பழந்தமிழ் வீர விளையாட்டுக்களையும், தமிழ் பண்பாட்டு விழுமியங்களையும் பேணிப் பாதுகாப்பது தாயக மக்களின் கடமை மாத்திரமன்றி, புலம்பெயர் தமிழர்களின் பெருங்கடமையும் காலத்தின் கட்டாயமுமாகும்.

# கிழக்கில் சிவந்த சுவடுகள்



## கிழக்கில் நடாத்தப்பட்ட முதலாவது கூட்டுப்படுகொலை!

கிழக்கில் 1956 ஆம் தொடக்கம் தமிழ்மக்கள் மீதான படுகொலைகள் காலத்திற்கு காலம் நடைபெற்று வந்திருக்கிறது.

தற்போது தமிழர்கள் சிறுபான்மையாக இருக்கும் அம்பாறை மாவட்டம் 1963ஆம் ஆண்டுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்குட்பட்டதாக இருந்தது. கிழக்கில அப்போது தமிழர்களே பெரும்பான்மையாக இருந்தனர்.

1911ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் 55 வீதமாக இருந்தனர். முஸ்லீம்கள் 37வீதமாகவும் சிங்களவர்கள் 3வீதமாகவும் இருந்தனர்.

தற்போது தமிழர்கள் 38 வீதமாகவும் முஸ்லீம்கள் 37.5 வீதமாகவும் சிங்களவர்கள் 23 வீதமாகவும் உள்ளனர் 3வீதமாக இருந்த சிங்களவர்கள் தொகை இன்று 23 வீதமாக அதிகரித்திருக்கிறது.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்கள் 44வீதமாகவும். சிங்களவர்கள் 37வீதமாகவும், தமிழர்கள் 18வீதமாகவும் உள்ளனர்.

1940களின் பின்னர் அம்பாறையை அண்டிய பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் செய்யப்பட்டன. கல்லோயா அபிவிருத்தி திட்டம். கந்தளாய் குடியேற்றத்திட்டம், அல்லைக் குடியேற்ற திட்டங்களின் மூலம் கிழக்கு மாகாணத்தில் பெருந்தொகையான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர்.

1956 ஆம்ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பிரதமரானார் 1956ஆம் ஆண்டு யூன் 5ஆம் திகதி சிங்களம் மட்டும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார் இதை எதிர்த்து இலங்கைதமிழரசுக்கட்சி தலைவர்கள் கொழும்பு காலி முகத்திடலில் சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்தினர் இவர்கள் மீது சிங்களவர்கள் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலில் தமிழ் தலைவர்கள் பலரும் காயமடைந்தனர். கொழும்பில் தமிழ் தலைவர்கள் மீது தாக்குதல் நடத்திய சிங்கள

கிழக்கில் 1956 ஆம் தொடக்கம் தமிழ்மக்கள் மீதான படுகொலைகள் காலத்திற்கு காலம் நடைபெற்று வந்திருக்கிறது.

தற்போது தமிழர்கள் சிறுபான்மையாக இருக்கும் அம்பாறை மாவட்டம் 1963ஆம் ஆண்டுக்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்ட எல்லைக்குட்பட்டதாக இருந்தது. கிழக்கில அப்போது தமிழர்களே பெரும்பான்மையாக இருந்தனர்.

1911ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பில் கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் 55 வீதமாக இருந்தனர். முஸ்லீம்கள் 37வீதமாகவும் சிங்களவர்கள் 3வீதமாகவும் இருந்தனர்.

தற்போது தமிழர்கள் 38 வீதமாகவும் முஸ்லீம்கள் 37.5 வீதமாகவும் சிங்களவர்கள் 23 வீதமாகவும் உள்ளனர் 3வீதமாக இருந்த சிங்களவர்கள் தொகை இன்று 23 வீதமாக அதிகரித்திருக்கிறது.

தற்போது அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம்கள் 44வீதமாகவும். சிங்களவர்கள் 37வீதமாகவும், தமிழர்கள் 18வீதமாகவும் உள்ளனர்.

1940களின் பின்னர் அம்பாறையை அண்டிய பகுதிகளில் சிங்கள குடியேற்றங்கள் செய்யப்பட்டன. கல்லோயா அபிவிருத்தி திட்டம். கந்தளாய் குடியேற்றத்திட்டம், அல்லைக் குடியேற்ற திட்டங்களின் மூலம் கிழக்கு மாகாணத்தில் பெருந்தொகையான சிங்களவர்கள் குடியேற்றப்பட்டனர்.

1956 ஆம்ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் எஸ்.டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பிரதமரானார் 1956ஆம் ஆண்டு யூன் 5ஆம் திகதி சிங்களம் மட்டும் சட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார் இதை எதிர்த்து இலங்கைதமிழரசுக்கட்சி தலைவர்கள் கொழும்பு காலி முகத்திடலில் சத்தியாக்கிரக போராட்டத்தை நடத்தினர் இவர்கள் மீது சிங்களவர்கள் தாக்குதலை நடத்தினர்.

இத்தாக்குதலில் தமிழ் தலைவர்கள் பலரும் காயமடைந்தனர். கொழும்பில் தமிழ் தலைவர்கள் மீது தாக்குதல் நடத்திய சிங்கள

வர்கள் அம்பாறை இங்கினியாகல பகுதியில் இருந்த தமிழர்கள் மீதும் தாக்குதல் நடத்தினர். அம்பாறை மாவட்டத்தில் குடியேற்றப்பட்ட சிங்களவர்களாலேயே தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

ஏற்கனவே அங்கு குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு தமிழர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு பயிற்சிகளும் வழங்கப்பட்டிருந்தது இங்கினியாகல என்ற இடத்தில் இருந்த கரும்பு தொழிற்சாலையில் வேலை செய்து வந்த தமிழ் தொழிலாளர்கள் மீது சிங்கள காடையர்கள் தாக்குதல் நடத்தினர்.

பலர் கூரிய ஆயுதங்களால் வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர், அரைகுறை உயிருடன் இருந்தவர்களையும் இறந்தவர்களின் சடலங்களையும் தீயில் தூக்கி வீசினார்கள். இதில் 157 தமிழ் தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இதுவே இலங்கை வரலாற்றில் முதன் முதலில் பெருந்தொகையாக படுகொலை செய்யப்பட்ட சம்பவமாகும்.

1956ல் ஆட்சிக்கு வந்த பண்டாரநாயக்கா தமிழரசுக்கட்சி தலைவர் எஸ்.ஜே.வி செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் ஒன்றை செய்திருந்தார். இதனை எதிர்த்து ஜே.ஆர். ஜெயவர்த்தனா கண்டிக்கு பாதயாத்திரை சென்றார். இதனை தொடர்ந்து தென்னிலங்கையில் இனவாதம் பரப்பபட்டது.

பிரித்தானியக் குடியேற்றக் காலப் பகுதியில் இலங்கையில் சுமார் 60 வீதமான அரச சேவையாளர்கள் தமிழர்களாக இருந்தனர். இலங்கை முழுவதும் சேவையாற்றிய வைத்தியர்கள், பொறியியலாளர்கள். கணக்காளர்கள், அரச நிர்வாக சேவையாளர்க ளில் பெரும்பாலானவர்கள் தமிழர்களாகும்.

இலங்கையில் யாழ்.மாவட்டமே கல்வியில் முதல் இடத்தில் இருந்தது. இதனால் 60வீதமான அரச சேவையாளர்கள் தமிழர்களாக இருந்தனர்.

சிங்களத் தேசியவாதிகளைப் பெரும்பாண்மையாகக் கொண்ட இலங்கை சுதந்திரக் கட்சி 1956 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பொதுத்தேர்தல்களில் ஆட்சியைக் கைப்பற்றி சிங்கள மொழியை ஆட்சி மொழியாக்குவோம் என அறிவித்தனர். இலங்கையில் சிங்களம் மட்டுமே அரசகரும மொழி என அறிவித்தனர். சிங்களம் மட்டும் என்ற ஆட்சியாளரின் கொள்கையை எதிர்த்து இலங்கை தமிழரசுக் கட்சியினர் 1956, ஜுன் 5 ஆம் திகதி கொழும்பில் இலங்கை நாடாளுமன்றத்தின் முன்னால் அமர்ந்து அமைதியான முறையில் அறவழிப் போராட்டத்தைத் தொடங்கினார்.

இந்த அறவழிப்போராட்டத்தில் சுமார் 200க்கு மேற்பட்ட தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் இன உணர்வாளர்கள் பங்கு பற்றினர். எனினும், அரச அமைச்சர் ஒருவரின் தலைமையில் சிங்களக் காடையர்கள் இவர்களைத் தாக்கினர். பல தலைவர்கள் படுகாயமடைந்தனர். அவர்கள் பின்னர் தமிழர்களின் வர்த்தக நிலையங்களையும் வீடுகளையும் தாக்கினர். கொழும்பில் தமிழருக்குச் சொந்தமான 150 க்கும் மேற்பட்ட கடைகள் தாக்கி சேதமாக்கப்பட்டு எரியூட்டப்பட்டது.

தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டபோது அதனை தடுக்காத பிரதமர் பண்டாரநாயக்கா தமிழர்கள் பட்டு அனுபவிக்கட்டும் என பகிரங்கமாக அறிவித்தார். இந்த இனப்படுகொலையின் போது தமிழர்களின் வீடுகள் தீவைத்து கொழுத்தப்பட்டன. பல தமிழ் குழந்தைகள் கொதிக்கும் தாரில் போடப்பட்டார்கள். இக்காலப்பகுதியில் 300க்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். காலங்காலமாக கொழும்பு உட்பட தென்னிலங்கையில் வசித்து வந்த தமிழர்கள் அகதிகளாக வடக்கு கிழக்கிற்கு திரும்பினர்.

கல்லோயா கலவரம் அல்லது கல்லோயா படுகொலைகள் என்பது இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் இலங்கையில் இடம்பெற்ற சிறுபான்மை இலங்கைத் தமிழர் மீதான முதலாவது பெரும் இனவெறித்தாக்குதல் ஆகும்.1990 யூன் 11ஆம் திகதி விடுதலைப் புலிகளுக்கும் அரசு படைகளுக்கும் இடையில் போர் ஆரம்பிக்கப்பட்டது. இதற்கு சரியாக 3 வருடங்களுக்கு முதல 1956 ஆம் ஆண்டில் ஜுன 11 ஆம் திகதி இங்கினியாக்கல படுகொலை ஆரம்பித்து தொடர்ந்து ஐந்து நாட்கள் இடம்பெற்றது. உள்ளாக சிங்களக் குடியேற்றவாசிகள், மற்றும் கல்லோயா குடியேற்றத்திட்ட அவையின் ஊழியர்களும் இணைத்து அரச வண்டிகளில் வந்து நூற்றுக்கணக்கான தமிழரைக் கொன்றனர். 150 க்கும் கூடுதலான தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது பற்றி தார்ஜி வித்தாரசி எழுதிய Emergency "58 என்ற நூலில் விபரமாக எழுதியுள்ளார். (Vittachı> Tarzıe (1958). Emergency 58. The Story of the Ceylon Race Riots தார்ஜி வித்தாச்சி ஆரம்பத்தில் சிலோன் டெயிலி நியூஸ் பத்திரிகையில் பணியாற்றினார். பின்னர் சிலோன் ஒபசேபர் பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார். அவசரகால சட்டம் 58 என்ற இந்நூல் உலக அளவில் பிரசித்தி பெற்றது. சிங்கள பேரினவாத அரசின் உண்மை முகத்தை உகைத்திற்கு அம்பலப்படுத்தியது என்லாம்.

**கல்லோயா சிங்கள குடியேற்றத்திட்டம்:**
கல்லோயா குடியேற்ற திட்டம் என்பது நிலங்களற்ற வெளிமாவட்ட சிங்களவர்களை காடுகளாக இருந்த சில இடங்களில் குடியேற்றுவதற்காக 1919 ஆம் ஆண்டு தொடங்கிய திட்டம் ஆகும். இலங்கை சுதந்திரமடைந்த பின் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த கிழக்கு மாகாணம் சிங்கள் அரச தரப்பால் இலக்கு வைக்கப்பட்டது.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் ஓடிய கல்லோ அணைக்கட்டு ஆக்கப்பட்டு, 40ஆயிரம் ஏக்கர் நிலத்தில் விவசாயம்

**தொடரும்...**

# குருந்தூர் மலை விவகாரம்: ஜெனீவாவை திருப்திப்படுத்த இரகசிய திட்டமா?





குருந்தூர் மலையில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரை விவகாரம் இன மத நல்லிணக்கம் எனும் பெயரில் குருந்தூர் மலையில் இரகசிய கலந்துரையாடல் இன மத நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக தெரிவித்து குருந்தூர்மலை ஆலயம் சார்ந்தவர்கள் என சிலருக்கும் , பௌத்தமத குருமார்களுக்கும் இடையில் குருந்தூர் மலையில் இரகசிய கலந்துரை யாடல் ஒன்று அண்மையில் இடம்பெற் றுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் குமழமுனை தண்ணிமுறிப்பு பகுதியில் அமைந்துள்ள குந்தூர்மலை பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளை மீறிசட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட விகாரை விவகாரம் தற்போது சர்வதேச அளவில் பாரிய பேசுபொருளாக மாறியுள்ளது.

2018 ம் ஆண்டு முதல் குந்தூர்மலை பகுதியில் அமைக்கப்பட்டுவரும் விகாரை விவகாரம் அப்பகுதி தமிழ் மக்களுக்கும் பெரும்பான்மை இனத்தவர்களுக்கும் இடையே பாரிய முறுகல் நிலையை உருவாக்கி தொடர்ந்து வருகிறது.

குருந்தூர்மலை பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளை மீறி சட்டவிரோதமான முறையில் இராணுவ ஒத்துழைப்புடன் விகாரை அமைக்கும் பணியினை முன்னெடுத்த கல்கமுவ சாந்த போதி தேரர் குறித்த விகாரையின் விகாராதிபதியாக இருந்து குறித்த விடயங்களை முன்னெடுத்தார்.

இராணுவ ஆதரவுடனும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரது ஆதரவுடனும் கல்கமுவ சாந்த போதி தேரர் நீதிமன்ற உத்தரவுகளை மீறி சட்டவிரோதமான விகாரை அமைக்கும் பணியினை தொடரும் நிலையில் முரண்பாடுகள் தொடர்ந்து வருகிறது.

குறிப்பாக இந்த குந்தூர்மலை பகுதியில் நீதிமன்ற உத்தரவுகளை மீறி சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட விகாரை விவகாரம் தொடர்பில் தீர்ப்புகளை வழங்கிய நீதிபதி ரி.சரவணராஜா அவர்கள் உயிர் அச்சுறுத்தல் காரணமாக பதவியை திறந்து நாட்டை விட்டு தப்பிச் சென்ற நிலையில் குறித்த குந்துர்மலை விவகாரமானது சர்வதேச அளவில் பாரிய பேசுபொருளாக மாறியிருந்தது இந்நிலையில் குறித்த விவகாரமானது வருகிற மாதம் ஆரம்பமாகவுள்ள ஜெனீவா அமர்வுகளில் பேசப்படலாம் என எதிர் பார்க்கப்படுகிறது

இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்களால் குறித்த விகாரையின் விகாராதிபதியான கல்கமுவ சாந்த போதி தேரர் நீக்கப்பட்டதாகவும் புதிதாக குறித்த விகாரையின் விகாராதிபதியாக சியம்பலகஸ்கல விமலசார தேரர் நியமிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் இனமத நல்லிணக்கத்தினை மேற்கொள்ளவென வடகிழக்கு மாகாணத்திற்கு பொறுப்பாக ஜனாதிபதியால் புதிதாக நியமிக்கப்பட்ட குறித்த சியம்பலகஸ்கல விமலசார தேரர் தலைமையில், சிவசேனை அமைப்பின் வன்னி பிராந்திய இணைத்தலைவர் தமிழ்த்திரு மாதவன் உள்ளிட்ட குழுவினர் மற்றும் குந்தூர்மலை ஆலயம் சார்ந்தவர்கள் என சிலர் , பௌத்த மத குருமார்களுக்கிடையில் இனமத நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் குறித்த இரகசிய கலந்துரையாடல் இடம் பெற்றிருக்கின்றது.

குறித்த கலந்துரையாடல் தொடர்பாக குந்தூர்மலை ஆலயம் சார்ந்தவர்கள் என அழைக்கப்பட்டிருந்தவர்களுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தும் ஊடகங்களுக்கு தகவல்களை வழங்காது இரகசியமான முறையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்று அவர்களுடன் புகைப்படங்களை எடுத்தது மட்டுமல்லாமல் புகைப்படங்களை வெளியே விடமாட்டோம் இது ஜனாதிபதிக்கு காண்பிக்கவே எனவும் தெரிவித்துள்ளனர்

இருப்பினும் இவர்களது சந்திப்பு தொடர்பான புகைப்படங்கள் வெளிவந்துள்ளது குறித்த விவகாரமானது வருகிற மாதம் ஆரம்பமாகவுள்ள ஜெனீவா அமர்வுகளில் பேசப்படலாம் என்ற நிலையில் குறித்த விவகாரம் தொடர்பில் அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்துள்ளது. அங்குள்ளவர்களுடன் பேச்சுக்களை முன்னெடுக்கிறோம் என்ற பிரச்சாரத்தை ஜெனீவா அமர்வுகளில் முன்னெடுக்கவே என சமூக ஆர்வலர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

குறித்த சந்திப்பில் இவ்வாறான உள் நோக்கம் ஏதும் இருக்கலாம் என்ற பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. என குறித்த சந்திப்பில் கலந்துகொண்ட பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் தெரிவித்தார்.

# மேய்ச்சல் தரையில் நீதிகோரி மட்டக்களப்பில் கறுப்புப் பொங்கல்!

தமிழர்களின் பட்டிப் பொங்கலன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலத்தமடு மாதவனையில் பசுக்கள், காளைகளுக்கு இழைக்கப்படும் கொடுமைகளை கண்டித்து மட்டக்களப்பு காந்தி பூங்காவில் கவனயீர்ப்பு போராட்டம் 16ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் அழைப்பில் நடைபெற்றது,

மட்டக்களப்பு மாதவனை மயிலத்தமடு மேய்ச்சல்தரையில் அத்துமீறி குடியேறவும் பயிர்செய்யவும் முனையும் ஆக்கிரமிப்பாளர்கள் தொடர்ச்சியாக அங்கு மேய்ச்சலில் ஈடுபடும் பசுக்களுக்கும் காளைகளுக்கும் சொல்லொணாத் துயரங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

அரசினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளும், நீதிமன்றத் தீர்ப்புக்களும் முறையாக அமுல் செய்யப்படுவது உறுதிப்படுத்தப்பட்டு, பட்டி மேய்ச்சல் தரைகளிலிருந்து அனைத்து சட்டவிரோதிகளும் அகற்றப்பட வேண்டும். மேய்ச்சல் நிலத்தில் எந்தவொரு பிற நடவடிக்கைளும் மேற்கொள்ளப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மயிலத்தமடு பெரிய மாதவணை கால்நடை கமநல அமைப்பின் தலைவர் நிமலன் தலைமையில் இடம்பெற்ற குறித்த ஆர்ப்பாட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கோ.கருணாகரம், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன் உள்ளிட்ட அரசியற் பிரமுகர்கள், மதத்தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், கால்நடை வளர்ப்பாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

தங்களது கால்நடைகளுக்கான மேய்ச்சற் தரை கோரிய பண்ணையாளர்களின் போராட்டமானது கடந்த 124 நாட்களாக முன்னெடுத்து வரும் நிலையில் கடந்த காலங்களில் மேற்படி மேற்ச்சற் தரையில் கோலாகலமாகவும் பக்தியாகவும் தங்களின் கால்நடைகளுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக பட்டிப் பொங்கல் நிகழ்வினை பண்ணையாளர்கள் முன்னெடுத்து வந்த நிலையில் இம்முறை அங்கு அத்துமீறிய விவசாயத்தில் ஈடுபவர்கள் தங்கள் கால்நடைகளுக்கு இழைக்கும் அநியாயங்களை எதிர்த்து பட்டிப் பொங்கலைப் புறக்கணித்து இவ் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

பச்சைத் தரை எங்கும் இரத்தக் கறை என்ற மகுடவாசகத்துடன் பண்ணையாளர்கள் மேலாடையின்று 124 வெற்றுப் பொங்கல் பானைகள் சகிதம் குறித்த ஆர்ப்பாட்டம் காந்திப் பூங்காவில் ஆரம்பமாகி பின்னர் பேரணியாக மட்டக்களப்பு கச்சேரிக்கு சென்று அங்கு அரசாங்க அதிபருடன் கலந்துரையாடி பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பிரதிநிதிகள், அரசியற் பிரதிநிதிகள் என்போருடன் அரசாங்க அதிபர் கலந்துரையாடல் மேற்கொண்டு இறுதியில் பண்ணையாளர்களினால் மகஜரும் கையளிக்கப் பட்டது.

இதன் பின்னர் அரசாங்க அதிபர் புதிதாக நியமனம் பெற்றவர் என்ற ரீதயில் அவர் மேற்படி விடங்களை கவனத்திற் கொள்வதாக தெரிவித்த வாக்குறுதிக்கு அமைவாக குறித்த ஆர்ப்பாட்டம் நிறைவுறுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசியம் பத்திரிகையின் மின்னிதழைப் பெற இவ் வாட்ஸ் ஆஃப் குழுவில் இணைந்து கொள்ளுங்கள்.
SCAN ME

SUXUS
WEAR
சக்சஸ் வெயார்
New Clothes
New Fashion
Elegant Quality
இல. 102, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், இலங்கை.



suxuswear@gmail.com - Tel: 021 2222997

SMART TECH SOLUTION





உங்களுக்கு வீடு, அலுவலகம் மற்றும் கம்பனிகளுக்கு CCTV கண்காணிப்பு கமரா சிறந்த முறையில் அமைத்துத்தரப்படும். சிறந்த வாடிக்கையாளர் சேவை அனுபவம் வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்கள் CCTV installation துறையில் 15 வருட அனுபவம் வாய்ந்த நிறுவனம்.

Our Services:
CCTV sales & Installation / Alarm system
Door Lock /Finger Print Attendance /Electric Fence / Local Networking / Computer Repair & Maintenance / Software Development



CCTV பொருத்துனர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

+94 71684 3023 / +94 21221 3023
No: 282, Hospital Road, Jaffna.
www.smarttechsolution.lk

Contact us for More Information
+94 77 684 3023



இப்பத்திரிகை 18.01.2024 அன்று அகரவ் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால், யாழ்ப்பாணம், கண்ணாதிட்டி வீதியில் 27ஆம் இலக்கத்திலுள்ள பணிமனையில் தயாரிக்கப்பட்டு, வெளியிடப்படுகிறது.